வே. 7

அடையாறு ...

முருகன் துணை.

# ஸ்ரீ பழநியாண்டவர்

## சரித்திரச்சுருக்கம்.

## திருப்போரூர் தலமான்மியச்சுருக்கம்.

## ஸ்ரீ சிதம்பரசுவாமிகள்

## ஆதீன சரித்திரச்சுருக்கம்.

இவை

மகாவித்வான்

[illegible]சை அஷ்டாவதானம்

சபாபதிமுதலியார் அவர்கள்

இயற்றிய நூல்களையனுசரித்து

திருமயிலை

ச-செந்தில்வேலுமுதலியாரால

தொகுத்து.

சென்னை

விக்டோரியா ஜுபிலி அச்சுக்கூடத்தில்


பதிப்பிக்கப்பட்டன.

கர௵ மாசி மீ.

இதன் விலை அணா - ௨.

இப்புத்தகம் வேண்டியவர்கள் திருப்போரூர் மலையடிவாரத்திலுள்ள திருமயிலை ச-செந்தில்வேலுமுதலியாரது பழனியாண்டவர் மடத்திலிருக்கும் அண்ணாமலைப்பரதேசியாரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

திருமயிலை
வி-சுந்தரமுதலியார்.



உ

முருகன் துணை.

# ஸ்ரீ பழநியாண்டவர்

## சரித்திரச்சுருக்கம்.

திருக்கைலாயத்தில், ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரர் திருக்கரத்திலிருந்தசிற்சொரூபமாங்கனியைத்தரவேண்டுமென்று விநாயகரும் சுப்பிரமண்யரும் கேட்கப் பரமேஸ்வரர் இவ்வுலகத்தை முன்னதாக வலம்வருபவனுக்குக் கொடுப்போமென்னச் சுப்பிரமண்யர் மயில்வாகனரூடராய் ஒருநொடியில் உலகமுழுதும் வலமாகவருவதற்குமுன், விநாயகர் பரமசிவத்தைவலம்வந்து அண்டாண்ட புவன சராசரங்கள்யாவும் உம்முடைய திருமேனியே யாகலான் உம்மை வலம்வந்தபோழ்தே அவைகளையெல்லாம் வலம்வந்தவனாகின்றேன் ஆகையால் கனியைத்தரவேண்டுமென்று பெற்றுக்கொண்டனர். உடனே சுப்பிரமண்யர்வந்து

கனியைக்காணாமல் பிணங்கித் திருவாவினன்குடியி லெழுந்தருளியிருக்கச் சிவபெருமான் அவர் பிணக்கைத்தீர்த்து அப்பனே பழம் நீயாகவேயிருக்க வேறுபழம் ஏதுக்கென்றருளினர்.

இதுநிற்க, முன் ஸ்ரீபார்வதிதேவியார் திருக்கலியாணமஹோற்சவசமையத்தில் பொதிகைக்கனுப்பப்பட்ட அகஸ்தியமுனிவர் கொஞ்சகாலம் க்ஷேத்திரவாசஞ் செய்யவேணுமென்னுங் கருத்துடன் தானில்லாதகாலத்தும் பொதிகை நின்றநிலையிலிருக்க வேண்டியதற்காகத் தன்னுடைய சீடரில் இடும்பனுக்கு வேண்டிய மந்திரசாதனங்களைக்கற்பித்து அவனைக்கைலாயகிரியினின்றும் சிவசத்தி சொரூபமாகிய சிவகிரி சத்திகிரி யென்னுமிரண்டுமலைகளையும் எடுத்துவரும்படியாக்கியாபித்தனர். அவன் அப்படியே கைலைக்குச்சென்று அவ்விரண்டுமலைகளையும் ஓர்காவடியிற்றூக்கி யெடுத்துக்கொண்டு வரும்போது பொதிகைக்குச்சமீபத்தில் வராகமலைச்சாரலிலுள்ள வையாபுரி தீர்த்தக்கரையில் தேகோபாதைநிமித்தம் காவடியையிறக்கினன். சுப்பிரமண்யர் குழந்தை வடிவாய் அச்சிவகிரியின்பேரில் நின்றனர். அதைக்கண்ட இடும்பன் அச்சிவகிரி யசைக்கப்படாமையால் தன்கையிலிருந்த கதாயுதத்தினால் அவரையடிக்க யத்தனித்தான். உடனே சுப்பிரமண்யர் அருகிலிருந்த ஓர் *தெண்டைப் பிடுங்கிக்கொண்டு அவ்விடும்பனை யடித்துத்துரத்தினர்.

அதுசங்கதி பொதிகையிலிருந்த அகஸ்தியர் தெரிந்து ஓடிவந்து சிறுபிள்ளைவடிவாயிருந்த சுப்பிரமண்யரை வணங்கி யஞ்சலியஸ்தராய் இச்சிவகிரியுச்சியில் தேவரீரேவீற்றிருந்து இதை முத்தித்தலமாக்கவேண்டுமெ, இம்மலைகளை யிங்குக்கொண்டுவந்த இவ்விடும்பனுக்கு முன்பூஜையும் பின் அபிஷேகமுதலியவை தேவரீரதுவுமாக வருள்செய்ய வேண்டுமெனப்பிரார்த்திக்க, அவ்வாறேயாகுகவெனச் சுப்பிரமண்யர் அகஸ்தியருக்குப் பலவரங்களை மகிழ்ந்தருளினர்.

---

* தெண்டு - பிரம்பு.

# திருப்போரூர்
# தலமான்மியச்சுருக்கம்.

பூர்வம் நைமிசாரணியவனத்தில், பரத்துவாசர், வசிஷ்டர், சதான்மர், காசிபர், கௌதமர், துருவாசர், முதலிய அனேக ரிஷிகள் விபூதி ருத்திராக்ஷ தாரிகளாயும் சிவபூஜா துரந்தரா யும் ஓரிடத்திற்சேர்ந்து ஜனன மரணமாகிய சமுத்திரம் மிகப் பெரிதாயிருப்பதால் அதனைக்கடத்தற்குத்தக்க மரக்கலம் ஸ்ரீ சுப்பிரமண்ணியக்கடவுளது பாதாரவிந்தமேதவிர வேறில்லையெ னத்திர்மானித்து, அக்கடவுளின் அனுக்கிரகத்தைப்பெறுவதற்கு உபாயம்யாதெனை விசாரிக்கத்தொடங்கினர். அப்பொழுது பரத் துவாசர் அதற்குபாயம் சத்திய மென்றனர், வசிஷ்டர் தபோபல மென்றனர், சதான்மர் தரும மென்றனர், காசிபர் யாக மென்ற னர், கௌதமர் புத்திர ரெனறனர், துருவாசர் தற வென்றனர், இவ்வாறு முனிவர்கள் பலபலவிதமாக யோசித்துக்கொண்டிருக் கும்போது அவர்கள் புண்ணியவசத்தினால் சூதபுராணிகர் அங்கு வந்தனர். முனிவர்கள அவரைப்பூஜித்து ஆசனத்திலிருத்தித தமதுகொள்கையை அவரிடத்தில விண்ணப்பஞ்செய்துகொ ள்ள சூதபுராணிகர் முனிவரைநோக்கிப்பூர்வம்வியாசர் எனக்குச் சொன்ன அதிரகசியப்பொருளொன்றுளது, அதை நான்கேட்ட வண்ணம் உங்களுக்குச் சொல்லுகின்றேன் நீங்கள் அதிபக்தி யோடு கேட்பீராகவென்று சொல்லத்தொடங்கினர்.

ஊழிகாலந்தோறும் வளர்ந்தோங்குகின்ற ஸ்ரீகைலாயத் தின் கொடுமுடி நடுவில் திருக்கோயில்கொண்டெழுந்தருளியி ருக்கும் ஸ்ரீபார்வதிசமேத பரமேஸ்வரரை அகஸ்திய முனிவர் பக்தியினால் பலமுறைவணங்கி வேதவாக்கியங்களாற் றுதித்த னர். அதைக்கேட்டுத் திருவுளமகிழ்ந்த பரமசிவம் அவரைக் கடாக்ஷித்து யாதுவேண்டுமென்றுவினவ, அகஸ்தியர் அடிப ணிந்து ஐஸ்வரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறும் பகமென்னும் சப்தார்த்தமாகச் சொல்லப்பட்டி

ருப்பதால் அவற்றின் உண்மையை யடியேனுக்கருள்செய்யவேண்டுமென்னப் பரமசிவம் முனிவனே நீவினவியது மோக்ஷசாதனமாயுள்ள பிரணவப்பொருளாகையால், அதனை இயற்கையாகவே யுணர்ந்துள்ள ஷண்முகமூர்த்தி யோர்காலத்து நம்பொருட்டுச் சொல்லியிருக்கின்றனர். ஆகையால், நீயதனை ஸ்கந்தரால் அறிந்துகொள்ளக்கடவையென்றனர். அதைக்கேட்ட அகஸ்தியர் வணங்கி விடைபெற்றுக்கொண்டு ஸ்கந்தகிரியை யடைந்து ஸ்ரீஸ்கந்தரைப் பலமுறைவணங்கி யஞ்சலித்து வேதப்பொருளாற் றுதிசெய்தனர். அதைக்கேட்டுச் சந்தோஷித்த ஸ்கந்தர் அவரது விண்ணப்பத்தைத் திருவுளங்கொண்டு நம்மைத்துதிசெய்தஸ்தோத்திரம் அகஸ்திய கீதையென விளங்குக, நம்மைக் கோரிவந்து பிரார்த்தித்த ஷாட்குண்ணியப்பொருளை போகத்துக்கும் மோக்ஷத்துக்கும் சாதனமாயுள்ள நிலவுலகத்தில் குருமூர்த்தமா யுபதேசிக்கின்றோமென்றருளினர். அகஸ்தியர் மீண்டும் வணங்கி உலகத்திலுள்ள அநேக க்ஷேத்திரங்களில் அடியேனுக் கருள்செய்யத் திருவுளங்கொண்ட க்ஷேத்திரத்தைத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, ஸ்கந்தர் "உலகத்தில் போகமோக்ஷங்களுக் கேதுவான தலங்கள அநேகமுளவாயினும், அவற்றுள் நமக்கு ஆநந்தகரமாயும் சர்வபாப விமோசனகரமாயுமுள்ள தலங்கள் அறுபத்துநான்குண்டு அவற்றுள் ஆறுதலங்கள் நமக்குரியவை, அவை திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவேரகம், திருவாவினன்குடி, சோலைமலை, யுத்தபுரம் என்பனவாம். அவ்வாறுதலங்களுள் நமக்கு அத்யந்தபிரீதிகரமாயுள்ளது யுத்தபுரம், ஏனெனில் மற்றத்தலங்கள் ஒவ்வோர்காலத்தில் ஒவ்வோர்காரணம் பற்றியதாகவிருக்கும், யுத்தபுரம் குன்றுதோறாடலிலொன்றாய் காரணம்பற்றியதாயினும், அதில் நமக்கு அங்கமாகிய பிரணவம் மலையாகவும் அதனுச்சியில் நாம் பரார்த்தமாகப் பிரதிஷ்டைசெய்து பூஜிக்கும் பிரணவப்பொருளாகிய ஸ்ரீபார்வதிசமேத பரமேஸ்வரருடன் விநாயகரும் நாமும் கற்பங்கள்தோறும் சகல ஆன்மகோடிகளுக்கும் பரிபாகத்துக்குத்தக்கபடி அனுக்கிரகிக்கும்பொருட்டே தோன்றுவதும் மறைவதுமாகச் சதாவீற்றிருக்கின்றோ

மாகையால், அதுவே மோக்ஷத்துக்குச் சுலபசாதனமான இடம். அப்பர்வதத்தின் கிழக்கில் நாம் வள்ளி தெய்வயானை சமேதராய் வீற்றிருக்கும் ஆலயமொன்றிருக்கின்றது, அதற்குத்தென்பால் பிரமஹத்தி முதலிய சகல பாபங்களையும் நசிக்கத்தக்க வள்ளையாரோடை யெனனும் சரவணப்பொய்கை யொன்றிருக்கின்றது, அதற்குவடதிசையில் நிம்பவிருக்ஷத்தின் மூலத்தில் விக்கினேஸ்வர ராலயமொன்றிருக்கின்றது. இவ்விதமான மகிமையுள்ள யுத்தபுரியில் நாம் பிரணவப்பொருளை யுபதேசித்தருளுவோம், அவ்விடத்திற்கு அகத்தியமுனியே நீபோய தியானித்துக்கொண்டிருந்தால் உனதுகோரிக்கை அதிசீக்கிரத்தில் சித்தியாகும்" என்றருளினர். அகத்தியமுனிவர் ஸ்ரீ ஸ்கந்தரை அடிபணிந்து விடைபெற்றுக்கொண்டு யுத்தபுரிக்கு வந்து சரவணப்பொய்கையில் மூழ்கிக் கைலாசநாதரையும், வேம்படி விநாயகரையும், ஸ்கந்தரையுந் தரிசித்துத் தியானித்துக்கொண்டிருந்தனர், ஸ்கந்தர் பிரம விஷ்ணு இந்திராதி தேவர்கள்போற்ற உத்தராயண கும்பரவி பூர்வபக்ஷத்தில் குருமூர்த்தமாயெழுந்தருளி யவருக்கு ஷாட்குண்ணியப்பொருளாகிய பிரணவார்த்தத்தை யுபதேசித்தருளினர். அப்போது அகத்தியர் அவ்வாறே எத்தகையோர்க்கும் எளிதிலனுக்கிரகித்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, ஸ்கந்தர் அவ்வாறேயாகுகவென வரமருளினர்.

## யுத்தபுரம்.

யுத்தபுரம் ஸ்ரீகாஞ்சிமா நகரத்திற்குக் கிழக்கில் ஐந்துயோசனைதூரத்திலுள்ளது, அவ்விடத்தில் தாருகாசுரன் முதலிய சில அசுரர்கள் ஸ்ரீ ஷண்முகரால் தாக்கப்பட்டபடியால் யுத்தபுரியென்றும், சமரபுரியென்றும், திருப்போரூரென்றும், சொல்லப்பட்டிருக்கின்றது. அதுசகலதேவர் முனிவர் சித்தர்களுக்கும் உபாசனஸ்தானம். அதில் புத்திபூர்வமாயாவது, அபுத்திபூர்வமாயாவது வசிக்கும் ஆன்மாக்களுக்குக் கலியுகாவஸ்தையும் யமவேதனையு மில்லை. கார்த்திகை நட்சத்திரத்தில் சரவணப்பொய்கையில் மூழ்கி ஸ்கந்தரை தரிசிப்பவர்களுக்கு எளிதில் முத்தியடைவதற்கேதுவான ஸ்ரீ சுப்ரமண்யக்கடவுளது அநுக்கிரகம் அதி சீக்கிரத்திற் கைகூடும்.

## பிரணவசைலம்.

ஒருகற்பாந்தரத்தில், வேதங்கள் கலிகாலத்தை யஞ்சிக் கைலாயகிரிக்குச்சென்று பரமசிவனைநோக்கித் தவஞ்செய்து பிரார்த்திக்க, அவர்பிரசன்னராய் அவைகலியால் வருந்தாவண்ணம் அவற்றின்வேண்டுகோளின்படி ஸ்ரீகாஞ்சிபுரத்துக்கு அக்கினி மூலையில் திருக்கழுக்குன்றமென்னும் ருத்திரகோடி க்ஷேத்திரத்தில் வேதகிரியென்னும் மலையுருவாயிருக்க அருள்செய்து அதன்சிகரத்தில் லோகாநுக்கிரகத்தின்பொருட்டுத் திருக்கோயில்கொண்டருளினர். பின்பு அவ்வேதங்களுக்கு ஆதியந்தமாயிருக்கின்ற பிரணவபுருஷன் தனக்கும் அவ்விதமுதவி கிடைக்க வேண்டுமென்னுங் கருத்துடன் பரமேஸ்வரனைச் சரணடைந்து குறையிரக்க, அவர் பிரணவத்தை அங்கமாகவுடைய நமது சுப்பிரமண்யத்தைப் பிரார்த்திக்கக்கடவாயெனவாக்ஞாபித்தனர்.

பிரணவம் புறவிடைகொண்டு ஸ்கந்தகிரியில் முருகக்கடவுளையடைந்துவணங்கித் துதிக்கப் பிள்ளையார் ஓங்காரத்தைக்கடைக்கணித்து உன்கோரிக்கை யுத்தபுரியில் நிறைவேறுமென்றனுக்கிரகித்தருளப் பிரணவம் வணங்கி விடைபெற்றுக்கொண்டு யுத்தபுரிக்குவந்து சரவணப்பொய்கையில்மூழ்கி ஸ்கந்தரை நமஸ்கரித்து அவரைப்பூஜிக்கவேண்டிக் கோயிலின் ஈசானத்தில் பிரணவாபிதமெனத் தன்பேரால் ஒருதீர்த்தத்தை யுண்டுபண்ணி அதனால் ஸ்கந்தரை யபிஷேகித்துத் தோத்திரஞ்செய்து அன்புடன் பிரார்த்திக்க, ஷண்முகர் அங்குள்ள சுயம்புமூர்த்தத்தினின்றுங் காட்சிதந்தருளிப் பிரணவபுருஷனைநோக்கி "நாம் மஹாமந்திர யந்திரங்களில் உன்னால் எப்படி சூழப்பட்டிருக்கின்றேமோ, அப்படியே இந்த யுத்தபுரியில் நீநமது பின்பக்கத்தில் சூழ்ந்து மலைவடிவாயிருக்கக்கடவை, இது முதல் பிரணவசைலமென்று பெயர்பெறுவை, உனதுச்சியில் நமக்குண்டாலுள்ள பிரீதியினால் ஸ்ரீபாலாம்பிகைசமேத கைலாயநாதரை பரார்த்தமாகப் பிரதிஷ்டைசெய்து வருடந்தோறும் ஆடிமாத கார்த்திகையில் தேவர் முனிவர் முதலானவர்கள்சூழ விநாயகருடன் பரார்த்தமாகப்பூஜிப்போம், அதனால் உன்னைப் பிரதக்ஷணஞ்செய்யும் ஆன்மகோடிகளுடைய மனோபீஷ்டங்கள்யாவும் எளி

ல் சித்தியாகும்'' எனப் பலவரங்களை யனுக்கிரகித்தருளினர். இம்மலை பிரணவரூபமாகையால் பிரணவசைலமென்றும், இம்மலையருகில் பின்னும் ஷண்முகரால் சில அசுரர்கள் தாக்கப்பட்டபடியால் யுத்தகிரியென்றும், இலக்குமிதேவியாற் பூஜிக்கப்பட்டபடியால் ஸ்ரீகிரியென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

முன்னொருகாலத்தில், கண்ணுவமுனிசாபத்தினால் விஷ்ணு சிவமுனியென்னும் ஊமையாய் அம்மலையைச்சார்ந்த ஓர்வனத்தில் தவஞ்செய்துகொண்டிருக்க, ஸ்ரீதேவியோர் பெண்மானாய் துணையில்லாமல் திகைத்துத் திரிந்துகொண்டிருந்து ஒருநாள் தெய்வகதியாய்ச் சிவமுனியருகில் வந்துநிற்க அவர் அம்மானை இச்சையுடன் பார்த்தமாத்திரத்தில் அது கருப்பங்கொண்டு ஓரோடைக்கரையில் குறத்தியர் வள்ளிக்கிழங்கு தோண்டிய பள்ளத்தில் ஓர் பெண்குழந்தையைப்பெற்று அது தன்னின் வேறாயிருந்ததால் அவ்விடத்தில் வேடர்வரும் அரவங்கண்டு குழந்தையைவிட்டுப்போய்விட்டது. அத்தருணத்தில் அங்கு வந்த வேடராஜன் குழந்தையையெடுத்துப்போய் வள்ளிநாயகயென்று பெயரிட்டுச் சீராட்டி வளர்த்துவந்தான்.

குழந்தையை விட்டுப்போனமான் சாபவிமோசன காலம் நேர்ந்தமையால், பிரணவசைலத்தைப் புல்மேய்ந்துகொண்டே மும்முறை சுற்றிவந்த மாத்திரத்தில் சுயரூபமாகிய திருமகளுருவத்தைப்பெற்று ஆச்சரியமுற்று சரவணப்பொய்கையில் மூழ்கிச் சண்முகரையும் வேம்படிவிநாயகரையும் தரிசித்துப் பிரணவசைலத்தை வலம்வந்து அதனுச்சியில் வீற்றிருக்கும் கிரீசுரரைப் பூஜித்துத் தன்பதியையடைய வேண்டுமென்னும் விருப்பத்துடன் தவஞ்செய்துகொண்டிருந்தனள். இப்படியிருக்கச் சிவமுனிவர் அனேகவனங்களிற் சஞ்சரித்து யோகுசெய்தும் சாபவிமோசனங்கிட்டாமல் கைலையைச்சேர்ந்து அதன்சாரலில் அரியதவஞ் செய்துகொண்டிருந்தனர். கைலாசபதி அவருக்குத் தரிசனங்கொடுத்து சிவமுனியே இது கண்ணுவமுனிவரது சாபத்தால் நேர்ந்தமையால் அக்கண்ணுவமுனிவன் யுத்தபுரியில் ஸ்கந்தர் உபாசனையை யுயிர்த்துணையாகக்கொண்டு ஸ்கந்தராற் பிரதிஷ்டைசெய்யப்பட்ட பிரணவகிரீஸ்வரரை நாடோறும்பிர

தக்ஷணஞ்செய்துகொண்டு அதற்கருகிலோ ராச்சிரமத்திலிருக்கின்றனன், திருமகளும் சாபவிமோசனமடைந்து அங்கேயுன் பொருட்டுத் தவஞ்செய்து கொண்டிருக்கின்றனள், உனக்கும் அங்கு சாபவிமோசனம் கிடைக்குமென்றனர்.

அதைக்கேட்டசிவமுனிவர் பணிந்து விடைபெற்றுக்கொண்டு பூலோகத்தில் யுத்தபுரியெல்லையை யடைந்தமாத்திரத்தில் தன்னுடைய சித்தம் நிர்மலமானதைக்கண்டு ஆச்சரியமுற்று சரவணப்பொய்கையில் ஸ்நானஞ்செய்து ஸ்கந்தரையும், வேம்படி விநாயகரையும் தரிசித்துக் கிரியைவலம்வந்து அதன் சிகரத்திலுள்ள மஹாலிங்கமூர்த்தியைப் பூஜித்து வேதவாக்கியங்களாற் றுதிசெய்தனர். அப்போது கைலாயநாதர் காட்சிகொடுத்து சாபவிமோசனஞ்செய்து ஸ்ரீதேவியை நோக்கி உன்பூஜையினாலும் கிரிப்பிரதக்ஷணங்களினாலும் ஆனந்தமடைந்தோம், உன் கோரிக்கையின்படி உன்பதியைப் பெற்றுக்கொள்ளென்று அனுக்கிரகித்து, நீ நெடுங்காலமாய்ப் பதியைஅடையவேண்டுமென்னுங் கருத்துடன் தவஞ்செய்தபடியால் இம்மலைக்கு ஈசானத்தில் உன்னைப் புத்திரியாகப்பெறவேண்டி நெடுங்காலமாய்த்தவஞ்செய்துகொண்டிருக்கிற முனிவர்களுக்குநீ புத்திரிகளாக வவதரிப்பாய், விஷ்ணுதேவர் வராகவடிவாய்த்தேடிவந்து அம்முனிவர்கள் ஆச்சிரமத்தில் உன்னை யோராண்டுபரியந்தம் ஒவ்வொருபெண்ணாக விவாகஞ்செய்து நித்தியகலியாணரென்னும் பெயரையுடையராயிருப்பர். விஷ்ணுதேவர் உன்னைச் சதா மடியிலேயே வைத்துக்கொண்டிருப்பாராகலான் அந்தக்ஷேத்திரம் வாமகெவியென்றும், திருவிடவெந்தையென்றும் வழங்கும். அன்றியும் நீ அதிக பிரீதிகரமாய் நாடோறும் இந்த பிரணவகிரியை வலம்வந்தபடியால் உனக்குப் பிரிதிகரமாயிருக்கிற சுக்கிரவாரம் இக்கிரியை ஒருமுறை வலம்வந்தவர் சர்வாபீஷ்டங்களைப்பெற்று சந்தான விர்த்தியடைவர், இருமுறைவலம்வந்தவர் ஆயிரம் அஸ்வமேதயாகஞ்செய்த பலனடைவர், மும்முறைவலம்வந்தவர் பிறவித்துன்பத்தினின்றும் விடுபட்டுத் தேகாந்தத்தில் நமது பதவியையடைவர் எனப் பலவரங்களை யனுக்கிரகித்தனர். அதனால் அம்மலைக்கு ஸ்ரீபர்வதமென்னும் பேர்வழங்குகின்றது.

## வேம்படிவிநாயகர்.

முன்னோர்காலத்தில், சுரரும் அசுரரும் நெடுநாள் யுத்தஞ் செய்தனர். அதில் அசுரர் ஜெயமடைந்து யதோன்மத்தரா யெல்லோரையும் உபத்திரவப்படுத்தியதால்தேவர்முதலானோர் முறையிடவும், விஷ்ணுதேவர் அசுரரோடு யுத்தஞ்செய்ய அவர்கள் புறங்கொடுத்தோடிப் பிருகுமுனியாச்சிரமத்தைச்சந்தித்து, நீராடிவந்துகொண்டிருந்த பிருகுமுனிபத்தினியைச் சரணடைந்து குறையிரக்கப் பிருகுபத்தினி யசுரருக்கு அபயம்கொடுக்கலாகாதென மறுத்தும் கேளாமல் காலில்விழுந்து விட்டுத்தொலையாமல் கூச்சலிட்டலறப்பிருகுபத்தினி அபயாஸ்தங்கொடுத்தனள். உடனே யசுரரைத்துரத்திவந்த விஷ்ணுதேவர் அசுரர்களுக்கு அபயங் கொடுத்தவளை முன்னேசங்கரிக்க வேண்டுமெனக்கோபித்துப் பிருகுமுனி பன்னியின்கழுத்தைச் சக்கராயுதத்தால் துணித்தனர். அதுசங்கதி பிருகுமுனிகேள்வியுற்றுத் தவத்தினின்றும் நீங்கிவந்து விஷ்ணுவைநோக்கி யுன்தாய்க்குச் சமானமாக எண்ணத்தக்கவளை நீ ஹத்திசெய்தபடியால் நீ பத்துத்தாய் வயற்றிற் பிறக்கக்கடவையென்றும், திருமகளைநோக்கி நீ உன் கணவன்மார்பினிடத்திருந்தும் கொலைசெய்தகாலத்தில் சிறிதும் தயையில்லாமல் மரம்போலிருந்தபடியால் நீ கசப்பாகிய வேம்பாகக்கடவையென்றும் சபித்து மிருதசஞ்சீவினி மந்திரத்தால் பத்தினியைப்பிழைப்பித்துத் தவத்திற்கேகினர்.

திருமகள் சொல்லற்கரிய மனோதுக்க முற்றவளாய், யோகியருள்ளச் சுடரொளியாகிய விநாயகரா லச்சாபம் விமோசனமாகுமெனக்கருதி யுத்தபுரியில் பிரணவகிரிச்சாரலில் * கண்ணுவராசிரமத்தினருகே திருக்கோயில்கொண்டு வீற்றிருக்கும் விநாயகரைச்சேவித்துப் பிரார்த்திக்க, விநாயகர் மூஷிகவாகனரூடரா யெழுந்தருளித் திருமகளைநோக்கிச் சர்வலோகநிமித்த காரணராய் அநாதிமலமுத்தராய்த் தமதுதிருவருளே சத்தியாகக்கொண்டு சகலஜீவர்களுக்கும் உயிருமுணர்வுமாய் எங்கும் நிறைந்திருக்கின்ற சிவபெருமானுக்குத் தன்னடியாரிற் சிறந்தது ஒன்றுமில்லை, அவர்களே எவர்க்கும் எல்லாவற்றிற்கும் மேலோர்

* கண்ணாப்பேட்டையெனவழங்கும் கண்ணுவப்பேடு.

ஆகையால், அவ்வடிமைத்திறம்பூண்ட முனிவரது சாபவலிமை நம்மாலும் பிரமாதிகளாலும் எளிதில் நீக்கலரிது, ஆயினும் திருமகளே அஞ்சவேண்டாம், நீ நிம்ப விருக்ஷ வடிவாகி யிங்குநிலை பெற்றிருப்பாயாக, நாமும் அதனடிக்கண் நீங்காமல் வீற்றிருந்து சகலருக்கும் இடையூறுகளை நீக்கி நன்மைசெய்கின்றோமென்னத் திருமகள் உடனே வேம்பாகிநிற்கத் தாமும் அதனடியில் வீற்றிருக்கின்றனர். வேம்படிவிநாயகரது புகழைத் துதித்தவர் புண்ணியராவர், அவரைப்பூஜித்தவர் எல்லாவிரதங்களையும் முடித்தவராவர், அவ்விருக்ஷத்தைப் பிரதக்ஷணஞ்செய்தவர் பிறவித்துன்பங்களைவெல்வர் எனச் சூதமுனிவர் சொல்லக்கேட்ட நைமிசாரணியமுனிவர்கள் ஆனந்தபரவசராய் வணங்கி விடைபெற்றுக்கொண்டு யுத்தபுரிக்குச் சென்று கண்ணுவராசிரமத்திலிருந்து ஸ்கந்தரைத் தரிசித்து வேண்டியவரங்களைப்பெற்றனர்.

இத்தலமான்மியம் ஸ்காந்தத்தில் சங்கரசங்கிதையில் சொல்லப்பட்டிருக்கின்றது.

---

## ஸ்ரீ அருணகிரிநாதரருளிய

# திருப்புகழ்.

தனத்தா தானன தானா தானன—தனதான.

அனித்தே னேர்மொழி யாலே மான்மிக
வுடைத்தார் போலவு மோர்நா ளானதி
லடுத்தே தூதுக ளோடா டூடனதும் விடுவார்க

ளழைத்தே வீடினி லேதா னேவொ
நகைத்தே மோடிக ளாவார் காதலொ
டடுத்தே மார்முலை மீதே மார்புற வணைவார்பின்

குணித்தே பாகிலை யீவார் பாதியில்
கடிப்பார் வாயிதழ் வாயூ றேறல்
குடிப்பார் தேனென நாலா லீலைகள் புரிவார்கள்

குறித்தே மாமய லாலே நீள்பொருள்
பறிப்பா ராசுகள் சூழ்மா பாதக [யே
குணத்தார் மாதர்கண் மேலா சையைவிட வருள்வா

வணத்தே வேடுவர் மாதா மோர்பிணை
யெடுத்தே தானவர் வேடார் யாவரும்
வளைத்தே சூழவு மோர்வா ளால்வெலும் விரல்வீர

மலர்த்தே ஞெடையி லோர்மா வானதைப்
பிடித்தே நீள்கர வாயூ டாழியை
மணத்தா லேவிய மாமா லானவர் மருகோனே

சினத்தே சூரர்கள் போராய் மாளவு
மெடுத்தோர் வேல்விடு தீரா தாரணி
திருத்தோ ளாயிரு பாதா தாமரை முருகோனே

திருத்தேர் சூழ்மதி ளோரரா தூபிக
ளடுக்கார் மாளிகை யேமி யேனருள்
திருப்போ ரூரை தேவா தேவர்கள் பெருமானே.

---

தனத்தா தானதந்த—தனதான.

ருக்கார் வாளிகண்கள்
பொருப்பார வார்தனங்க
ளுரைத்தேன் வாலசந்த் நுதலூலா

முருச்சேர் நீண்மருங்குல்
பணைத்தோ ளோதிகொண்ட
லுவப்பா மேல்விழுந்து திரிவோங்க

ளருக்கா மாதர்தங்கள்
கலைக்கே யோடுமின்ப
வலைக்கே பூணுநெஞ்ச னதிபாவி

யசட்டால் மூடுகின்ற
மசக்கால் மாயுமிந்த
வவத்தா லீனனெற்கென றருள்வாயே

பெருக்கார் தாளிதும்பை
மருச்சேர் போதுகங்கை
யிணைச்சூ டாதிகம்பா புதல்வோனே

இருக்கா லேநினைந்து
துதிப்பார் நாவினெஞ்சி
விருப்பா யானைதங்கு மணிமார்ப.

செருக்கா லேமிகுந்த
கடற்சூர் மாளவென்ற
திறற்சேர் வேல்கைகொண்ட முருகோனே

தினைக்கோர் காவல்கொண்ட
குறத்தேன் மாதுபங்க
திருப்போ ரூரமர்ந்த பெருமாளே.

---

தானதானன தானன—தனதான.

சீருலாவிய வோதிம
மானமாநடை மாமயில்
சேயசாயல்க லாமதி முகமானார்

தேனுலாவிய மாமொழி
மேருமாமலை மாமுலை
சேலுலாவிய கூர்விழி குயிலனைய

தாருலாவிய நீள்குழல்
வேயளாவிய தோளியர்
சார்பிலேதிரி வேனைநி னருளாமலே

சாமவேதியர் வானவ
ரோதிநாண்மலர் தூவிய
தாளில்வீழவி னைமிக யருள்வாயே

காருலாவிய நீள்புன
வேடர்மால்வரை மீதுறை
காவல்மாதினொ டாவல்செய் தருள்வோனே

காணவாகம வேதபு
ராணநூலினி னோதிய
காரணாகரு ணாகர முருகோனே

போருலாவிய சூரனை
வாரிசேறெழ வேல்விடு
பூவைசேவக மாமயின் மிசையோனே

போதன்மாதவன் மாதுமை
பாதியாதிதொ ழாவரு
போரிமாநகர் மேவிய பெருமாளே.

திருப்போரூர் தலமான்மியச்சருக்கம்

முற்றிற்று.

---

உ

முருகன் துணை.

---

திருப்போரூர்

# ஸ்ரீ - சிதம்பரசுவாமிகள்

## ஆதீனச்சரித்திரச்சுருக்கம்.

கொங்குதேயத்தில் அவிநாசிக்ஷேத்திரத்தில் வீரசைவாசாரியராகிய சிவப்பிரகாசசுவாமிகள் திருவருள்பெற்ற சாத்தலிங்கசுவாமிகளிடத்தில் ஞானோபதேசம்பெற்ற குமாரதேவர் தமதாசிரியர் கட்டளையின்படி விருத்தாசலவாசியாய் ஆறுமாதத்திற்கொருமுறை அவிநாசிக்குக் குருதரிசனார்த்தம்போவது நியமமாகக்கொண்டிருந்தனர். அம்மார்க்கத்தில் அடியார்பத்தியிற்சிறந்த ஒரு ரெட்டியாருக்குக் குமாரதேவரது அனுக்கிரகத்தினாற்பிறந்த புத்திரர்களுக்குப் பாண்டிநாட்டில் மதுரைச்சங்கப்புலவர் மரபிற்றோன்றிய சிதம்பரகவிராஜர் கல்வி பயில்வித்துவந்தனர். அப்போதொருகால் அங்குவந்த குமாரதேவர் சிதம்பரகவிராஜர் கல்வித்தேர்ச்சியைக்கண்டு ஆட்கொள்ளக்கருதிச் சிலவேதாந்தச்சொற்களுக்குப் பொருள்வினவ அதற்கவர் உத்தரஞ்சொல்லமாட்டாதவராய்நிற்கக் குமாரதேவர் அவரைக்கிருபாநோக்கத்தால் மூன்றுமுறை கேசாதிபாதவரையில் நோக்கி யவிநாசிக்கு வழிக்கொண்டனர். கவிராஜரும் அச்சொற்பொருள்களையுள்ளுணர்ந்து அன்பும் பத்தியும் மிகுந்து அவரைப்பின்றொடர்ந்துசென்று மறுநாளுதயத்தில் அவிநாசியடைந்து, பரிணமத்திற்புகுந்து புறங்காத்திருக்க, ஒடுக்கத்தினின்றும் வெளியேவந்த சாந்தலிங்கசுவாமிகள் உள்ளேசென்று தாமியற்றிய வைராக்கியசதகம், வைராக்கியதீபம், அவிரோதவுந்தியார், கொலைமறுத்தல், ஆகிய நான்குநூல்களையும் கண்ணுடைய வள்ளலாரியற்றிய ஒழிவிலொடுக்கத்தையும் குமாரதேவர்கையிற்கொடுத்து உனக்குப்புத்திரனாகக்கொணர்ந்த இவ்விளவலைக்கொண்டு உரையியற்றுவிக்கக் கடவையெனக் கட்டளை

யிட்டனர். அவற்றைக் குமாரதேவர் இருகையிலுமேற்றுச் சிதம்
பரசுவாமிகளிடத்திற்கொடுக்க அவர் அவற்றைச் சிரமேற்கொ
ண்டு வணங்கிக் குமாரதேவருடன் விருத்தகிரியையடைந்தனர்.

பின்பு சிதம்பரசுவாமிகள் குமாரதேவரால் வீராகமவிதிப்
படி தீக்ஷைபெற்று அங்கயோகங்களையுணர்ந்து ஞானோபதே
சஞ்செய்யப்பெற்று ஞானசமாதிகூடியிருக்கையில் சொரூபத்
தில் மயில்சிறகால் மறைத்து நிர்த்தஞ்செய்யக்கண்டு ஆசிரியரி
டத்தில் விண்ணப்பஞ்செய்ய, அவர் உனது ஆத்மார்த்தமாகிய
மதுரைமீனாட்சியம்மை யதனைப்புலப்படுத்துமென விடைதந்த
னர். குருவாக்கியப்படி யுடனே மதுரைக்குச்சென்று ஓர்மண்
டலம் வரையில் தினம் ஒருபிடி பச்சறுகும் மூன்றுகை தீ
த்தமுமே உட்கொண்டு நிஷ்டை சாதித்திருக்கையில், தேவியார்
சுரம் கைகால்பிடிப்பு முதலிய நோய்களால் அவரைச் சோதித்
தும் அவர் நிலைமாறாமல் மீனாட்சியம்மை கலிவெண்பா வென
வோர்தமிழ்ப் பிரபந்தம் பாடித்துதித்தனர். தேவியார் திருவுள
மகிழ்ந்து தரிசனங் கொடுத்து அப்பிணிகளுடன் மலப்பிணியும்
நீங்குமாறு தமது மலர்க்கரத்தாற்றடவி இப்பதிக்கு வடபால்
முப்பது யோஜனை தூரத்தில் யுத்தபுர மென்னும் சுப்பிரமண்ய
க்ஷேத்திர மொன்று முன்பு ஆறுதரம் பிரசித்தியாயிருந்து இப்
போது ஜீரணப்பட்டிருக்கின்றது, அது ஏழாந்தரம் உன்னாலே ஜீர
ணோத்தாரணமாகி நிலைபெற்றுவிளங்க வேண்டுவதாதலால் அக்
கடவுள் உனதுநிஷ்டாநுபவத்தில் மயில்வடிவாய்ச் சொரூபத்தை
மறைத்துநின்றனர். அக்கடவுளே நாற்பதுதினத்தில் உனதுகுரு
வடிவாயெழுந்தருளித் சரிசனந்தந்து உண்மையை விளக்குவர்,
இவ்வமயம் தவறுபடில் மேல் ஜனன மெடுக்கவரும் எனத் திரு
வுளம் பற்ற அவ்வாறே தேவியாரருட்பிரசாதத்தைச் சிரமேற்
கொண்டு வணங்கி விடைபெற்று யுத்தபுரி யென்னும் திருப்போ
ரூராகிய பனங்காட்டையணுகி அங்கு வள்ளைப்பூடால் நிறைந்த
ஓடையில்நீராடி நியமங்கள் முற்றி பிரணவசைலச்சாரலில் வேம்
படிவிநாயகர் கோயிலில் வசித்திருந்து, மூன்றுநாள் வழக்கப்படி
சுவாமிகள் ஓடையில் நீராடி நியமமுடித்து அப்பனங்காட்டை
நோக்கிவரும்போது அதன்நடுவில் ஓர்பெண்பனை மூலத்தில் அவ

ஆச்சான்றூர் சிலதினங்களுக்குமுந்தி யப்பனையிற்கள்ளிறக்கயத்தனப்பட்டபோது அருட்பெருஞ்ஜோதியாய் வெளிப்பட்டசுயம்புமூர்த்தமாகிய முருகக்கடவுளைத் தரிசித்து, அன்று தொடங்கிச் சரணசம்பத்த மில்லாமல் தரிசனமாத்திரஞ் செய்து கொண்டு பிள்ளையார்கோயிலில் வசித்திருந்தனர். ஒருநாள் ஸ்ரீசுப்பிரமண்ய குமாரதேவரைப் போல எழுந்தருளிவரக் கண்டு அச்சமுற்று விரைந் தோடிச்சரணஞ்செய்து நின்று ஸ்ரீமீனாட்சியம்மை யருளியதை விண்ணப்பஞ் செய்தனர். அது கேட்டு முருகக்கடவுள் ஆயின் நாமிருவரும் சுவாமியைத் தரிசிப்போம் வருக வென்றருளி யிருவரும் பெண்பனையை யணுகாநிற்கையில், சுவாமிகள் ஆசிரியரை நோக்கிச் சுவாமி! ஆதியிலிவ்வாலய மெவ்வாறிருந்ததென ஸ்ரீசுப்பிரமண்யர் அவர் நெற்றியில் திருநீறிட்டு நேதிரத்தாற் பரிசித்து ஆலயமுதலியவற்றைப் பார்ப்பாயாக வென்றனர். ஆலயம் கெர்ப்பக்கிருகம் முதலிய மண்டபம், தேவிமார் சந்நிதி, திருமதில் கோபுரவாயில், துவஜஸ்தம்பம், மாடவீதி, மடாலயம், தீர்த்தம், முதலியயாவும் சிற்ப நூலின்படிச்சிறப்பாக விளங்கியிருக்கக்கண்டனர். ஆசிரியர் அவ்வாலயத்துட் சென்று சுவாமிசந்நிதியில் சிதம்பர சுவாமிகளுக்கு அநுக்கிரகித்து "ஹர ஹர" என்று மூலஸ்தானத்துட் சயம்புவாய் வீற்றிருந்ததம்மைத் தாமேநோக்கியஞ்சலி முகிழ்த்தாராயினர். அப்போது முருகக்கடவுளாகிய ஆசிரியரது திருவடிகளை யெதிராகக் கொண்டு வடதிசையாய்ச் சாஷ்டாங்கமாகச் சரணம் புரிந்து எழுவதற்கு முன் ஆசிரியரா யெழுந்தருளிய மூர்த்தி திருவுருக் கரந்தனர். சிதம்பர சுவாமிகள் பனைமர மூலத்தில் சுவாமி பழயபடியே யிருக்கக்கண்டு ஆனந்தபரவசராயினர். இவ்வாறு ஆசிரியராய் வந்தாட்கொண்ட காரணத்தால் அந்நாள் தொடங்கிச் சரணசம்பந்தம் நடந்து வந்தது. பின்பு சிதம்பர சுவாமிகள் நெஞ்சு விடுதூது என்னும் பிரபந்தமியற்றி விருத்தகிரியில் குமாரதேவர்க்கனுப்பி விட்டு வழக்கப்படி விநாயகர் ஆலயத்தில் வசித்திருந்தனர்.

அப்படியிருக்குநாளில் அவ்வாலயத்துக்கு வடபால் பூர்வம் கண்ணுவ ரிஷியின் ஆசிரமமாகிய கண்ணுவப்பேடு என்னும் ஊராருகில் நெடுநாளாய் கண் தெரியா திருந்த ஒரு குலாலன் தன்

குமாரரால் சுவாமிகளின் பிரபாவங் கேட்டு அவரிடம வந்து வணங்கி நிற்கச் சுவாமிகள் ஸ்ரீசுப்பிரமண்யம் நீயெண்ணியாங்கு கடாட்சித்தருளு மென்று சிந்தித்தவுடன் அவனுக்குக் கண்ணிரண்டுந் தெரிந்தன. அக்குலாலன் வேண்டுகோளால் அவன் சிறுகுடிலின்கண் ஓர் புளியமர நிழலில கொடி வளர்த்துக் கொண்டிருந்து அதன் வடகிழக்கிலுள்ள காலவாக்க மென்னு மூரிலிருந்து வந்து சரணடைந்த ஓர் முடவனைத் திருநீற்றால் பலித்திரளுக்கி மீண்டும் அனேகர்க்குச் சுரம் சூலைவலி வயிற்று வலி மகோதரம் குட்டம் முதலிய நோய்களை கொடித் திருநீற்றால் நிவர்த்தி செய்தனர். இதனால் வரப்பட்ட காணிக்கையும் சுவாமிகளைக் களவுசெய்யவந்து கண்கெட்டுப் பின்பு சுவாமிகள் அநுக்கிரகத்தினால் கணபெற்ற கள்வர் கொடுத்த திரவியங்களையும் கொண்டு தாமும் அடிமைப்பணி செய்து ஆலயத்திருப்பணியை நடத்திவர உத்தேசித்தனர்.

திருப்போரூர் குடிகளெல்லோருஞ்சேர்ந்து அக்கிராமத்தை யாண்டவர் பேரால் தத்தஞ்செய்து வேண்டிய பணிகளை யெப்போதுஞ் செய்து வருவதாகச் செப்பேட்டில் வரைந்துதந்தனர். இவ்வாறுகிடைத்த காணிக்கைகளைக் கொண்டு காப்பக்கிரகம் அந்தராளம் மஹாமண்டபம் துவஜஸ்தம்பம் மயில்மண்டபம் பலிபீடம் இவற்றை நிறைவேற்றி யந்திரஸ் தாபனமமைத்து கும்பாபிஷேகமுதலியன நிறவேற்றி நித்தியநைமித்திகங்களை நடத்திவந்தனர். இதுநிற்க வப்புளியமரத்தின் வடபால் சரஸ்வதிகூடம் பூசையிடம் ஒடுக்கவுறையுள் முதலிய இடங்களமைந்தவோர் பரிரூமம் நிருமித்து அதன் வடபாலிருந்த தடாகத்திற்கு வேலாயுததீர்த்த மெனப்பெயரிட்டு அதன் மேற்பால் ஓர்சிற்றாலயம் கட்டுவித்து அதில் சுந்தர விநாயகப் பிரதிஷ்டையும் வேலாயுதப்பிரதிஷ்டையும் செய்தனர்.

சுவாமிகள் திருப்பணி நடந்துவருவங் காலத்தில் திருப்போரூர் சந்நிதிமுறை பஞ்சாதிகாரம் முதலிய நூல்களையியற்றி வைராக்கிய சதக முதலிய நூல்களுக்கு உரையியற்றித் தம்மிடத் தன்புகூர்ந்த கிளியனூர் மூதாட்டியாகிய ஞானம்மை வேண்டுகோளின்பேரில் திருவாசகத்தில் "புணர்ப்ப தொக்க வெந்தை

யென்னை" என்னும் பாசுரத்திற்குப் பொருளுரைக்க அஃதெள விறந்த ஏட்டிலெழுத இடங்கொடுத்து வளர்ந்து வருகையில் முருகக்கடவுள் ஆசிரிய மூர்த்தமாகத் தரிசனங் கொடுத்து இப் பனுவல் சொல்லிய திருவாதவூரரே திருவாசகத்திற்குப் பொருள் சொல்லாமல் சிற்சபையே யதற்குப் பொருளெனக் காட்டி யிருக்கவும் இப்போதுரையிட் டடங்குமோ வென்று திருவாய்ம லர்ந்தருளலும், சிதம்பர சுவாமிகளா பயந்து நடுங்கிப் பெண்பால் வேண்டுகோளாயினமையந்தவுரை செய்யத் தொடங்கினேனென றிறைஞ்சினர், ஆயின் அவ்வோர் பனுவலுக்குப் பதவுரையாகச் சொல்கவென்று கட்டளையிட்டுத் திருவுருக்கரந்தனர்.

பூவிருந்தவல்லியைச் சேர்ந்த கோவூரில் வேளாண் மரபிற் றோன்றிய சிவசங்கரன் என்னும் ஓர் சிறுவன் முருகக் கடவுள் ஆட்கொண்டருளப் பித்தனைப்போல் திரிந்துகொண்டிருந்தான். அவன் தந்தை திருப்போரூரடைந்து சிதம்பர சுவாமிகளைப் பணிந்து புத்திரனை யெதிரிற் கிடத்தி முறையிட்டனர். சுவாமிகள் பிள்ளையின் குறிப்பை யுணர்ந்து ஆறுமுகந்துணைசெய்யும் என்னப் பிள்ளைக்கு அம்மயக்கம் நீங்கியதால் தந்தைமகிழ்ந்துபுத் திரனைச் சுவாமிகளிடத்தில் ஒப்புவித்து விடைகொண்டேகினர்.

பின்பு சுவாமிகள் அப்பிள்ளைக்குச் சிவலிங்கதாரண முதலியவற்றை யனுக்கிரகித்துச் சிவசங்கர தம்பிரானெனப் பெயர் தந்து ஓர்தட்டும் திருநீற்றுப்பையும் வேலாயுதமும் அவரிடத்திற் கொடுத்து ஆலயத்துட்சென்று அங்குவருபவர்களுக்கு ஆறுமுகந்துணையென்று திருநீறு தருவாயாயின் திருப்பணி தானே நிறைவேறுமென அவர் அவ்வாறே ஆலயத்திற் சென்று இடைவிடாமல் முயன்று திருப்பணிகளையும் பிரமோற்சவமுதலிய சிறப்புகளையும் நடத்திவந்தனர்.

இவ்வாறு சிதம்பர சுவாமிகள் அநந்தமான்மியங்களுடன் ஐம்பதாண்டிருந்து வைகாசிமாதம் விசாக பௌர்ணமியில் தாம் நிரதிசயானந்த நிலையிற் கலவாமற் கலந்து நிற்குஞ் செவ்வி வருவதுணர்ந்து அதற்கு முன்னாளாகிய சுவாதியில் மகேஸ்வர பூஜையும் மறுநாள் விசாகத்தில் ஸ்ரீசுப்பிரமண்ய மூர்த்திக்கு மஹாபி

ஷேகமும் மூன்றாநாள் தொடங்கி வேம்படி விநாயகருக்கும் பிரணவமலைக்கைலாய நாதருக்கும் முறைப்படி அபிஷேகாதி களும் செய்வித்துத் தரிசனஞ் செய்து வருக வெனக்கட்டளை யிட்டு அன்று மஹேஸ்வர பூஜையை நடத்திக்காட்டி மறுநாள அபிஷேகமுதலியவற்றை நடப்பிக்கும்படிக்கு அவரையாலயத்துக் கனுப்பித் தாம் வேலாயுத தீர்த்தத்தில் மூழ்கி சிவபூஜையாரா தனை முடித்து ஒடுக்கத்தில் நிஷ்டை கூடியிருந்தனர். அப்போது முப்பதாமாண்டு தொடங்கித் தொண்ணூறாமாண்டளவும் அரு ணகிரிநாதரே குருவாய் வந்தனுக்கிரகிக்க வேண்டுமென்று நா டோறுந் தவறாமல் அருணகிரியைப் பிரதக்ஷணஞ் செய்து வந்த சோணாசல தேவர், அருணகிரீசர் ஆதிசைவரைப் போலத் தோன்றிக்கட்டளையிட்டவாறு, திருப்போரூருக்குவந்து, அவரவ ரவை ஞானநோக்காலெதிர்பார்த்திருந்த சிதம்பர சுவாமிகளைச் சரணடைந்து,

நேரிசைவெண்பா.

எடுத்தஜன னங்கடொறு மீன்றெடுத்த தாயர்
கொடுத்தமுலைப் பாலனைத்துங் கூட்டில் அடுத்துவள.
பண்ணு கனைத்துயிலும் பாலாழி யுஞ்சிறிதா
மண்ணு சிதம்பர தேவா.

எனப்பலவாறாகத் துதித்து வணங்கச், சுவாமிகள் கிருபை கூர்ந்து அவர்கோரிக்கையை நிறைவேற்றித் தமது பூஜாதிரவி யங்களுடன் ஒடுக்கவுறையுளிற் செய்வித்திருந்த சுரங்கத்தின் வழியாக அதற்குத் தென்பால் கட்டியிருந்த சாமாதியுள் ளறையில் இறங்கி ஒடுக்கமுற்று நின்றனர். அச்சமயம் ஆலயத் தில் கர்ப்பூர தீபாராதனை காலமாகையால் சிதம்பர சுவாமிகள் ஆண்டவர் சந்நிதியில் அஞ்சலியஸ்தராய்த்தோன்றி மூலஸ்தான த்தில் மறைந்திடக் கண்டு சிவசங்கரரும் மற்றையரும் அற்புதமு மானந்தமுமுற்று ஹர ஹர வென்னும் ஒலியுடன் பரவசராயினர்.

பின்பு சிவசங்கரர் பரிணாமத்திற்கு வந்து ஆசாரியர் பூரண தலைசயிலமர்ந்த முறைமைகளைக் கேள்வியுற்று அடக்கற் கரிய ஆராமை மேற்கொண்டு ஆசிரியர் ஒடுக்கமுற்ற சந்நிதியில்நின்று

### கழிநெடில்விருத்தம்.

இக்கலியுகத்தி லெழுந்தவென் குருவே யின்பமேயன்பினுணி
றைந்த, முக்கனிரசமே முதிர்சுவையமுதே மூதறிவேமறைப்
பொருளே,சர்க்கரையொடுகற் கண்டெனருசிக்குந் தயாளுவேத
ரியனேன் றனக்குத்,துக்கசாகரத்தைத் தொலைத்தருள்புரிந்தாய்
தூயனீயெங்கொளித்தனையே.

எனத் துயரப்படக் கண்ட சோணாசல தேவர் அவா ஆராமையை யொருவாறுற்றி அவரைச் சிதம்பர சுவாமிகளது ஆசனத்திலிருத்தி ஆண்டு தோறும் வைசாக பௌர்ணிமியிலும் அதற்கு முன்னாளிலும் பின்னாளிலும் மகேஸ்வரபூஜை யபிஷேகாதி நடத்த வேண்டுவ தென்று சிதம்பர சுவாமிகள் கட்டளை யிட்டருளிய முறைமையைத் தெரிவித்துத் தாமும் அருது கொண்டு விடைபெற்றுத் திருவண்ணாமலைக்குச் சென்றனர்.

---

## இரண்டாவது
## சிவசங்கரசுவாமிகள்.

ஸ்ரீசிவசங்கர தம்பிரான் ஆசாரியர் கட்டளைப்படி தரிசனு த்தம் வருபவர்களுக்கு ஆறுமுகம் துணை செய்யு மென்று திருநீறளித்து அவரவர் வியாதிகளை நீக்கிப் புத்திரப் பேறுண்டாக்கி யதனாற் சேகரித்த திரவியங்களைக் கொண்டு சந்நிதியின் இரணை மாளிகைமண்டபம் தெய்வயானைநாச்சியார்சந்நிதி யதன் இரணை மாளிகைமண்டபம் முதலிய திருப்பணிகளைச் செய்வித்துத் திருமயிலை வேலப்பமுதலியாரைக்கொண்டு இருபத்து நாற்கால் மண்டபமுங் கோபுரத்துக்கு அடிப்படையுமமைத்து கருங்கற் பணிகளை நிறைவேற்றுவித்தனர். சரவணப்பொய்கை யென்னும் வள்ளையாரோடையில் கருங்கற் படிகளை கட்டுவித்தனர். பிரணவசைலத்தில் சிறிதாயிருந்த கைலாய நாதராலயத்தைத் திருமயிலை தையநாயகமுதலியாரைக்கொண்டு புதுப்பித்து அவரால் இன்னளூர் இடையன்குப்பம் ஆகிய இரண்டு சரோத்திரியகிராமங்களைத் தானமாகவேற்றுத் தேவகாரியங்களை நடத்திவந்தனர்.

சாந்தலிங்க சுவாமிகளியற்றிய கொலைமறுத்த லென்னும் நூலுக்கிசையத் திருப்போரூருக்குள் ஜீவஹிம்சையாகிய பலிமுதலானதும் செய்யக் கூடாதெனக் கட்டளையிட்டு அவவா றாட்சி செய்து வருங்கால் ஓர்நாள் கோவளம் நவாப்பு மருமகன் திருப்போரூரெல்லையி லோர் சோலையி லோராட்டைச் சேதிக்கயத் தனித்ததைச் சுவாமிகள் ஏவலாளியைக் கொண்டு தடுத்து விட்டனர். அதுசங்கதி கேள்வியுற்ற நவாபு சுவாமிகளை வரவழைத்துச் சிறைப்படுத்தினன். சுவாமிகள் அன்றிரவில் பிராணத்தியாகஞ் செய்ய யத்தனித்துச் சிறைச்சாலையின சாளரவழியாய் சுவர்ப்புறத்தில் விழப்பிராணன் நீங்காமல் தேகோபாதையுடன் ஆறுமுகம்துணையென்று சொல்லிக்கொண்டு அன்னுகாரமின்றி ஆறுக்காட்டுக்குப்போய் பாலிநதியில்மூழ்கி சிவபூஜை முடித்துக் கொண்டு அதன்தீரத்தில் ஓர் மரத்தடியிலிருந்தனர்.

ஸ்ரீமுருகக் கடவுள் சிவசங்கரசுவாமிகளைப்போலுருக்கொண்டு அன்றிரவில் கோவளநவாப்பு பெண்சாதி வயற்றில்வேலாயுதத்தாற் குத்த அதுவே வயிற்றுவலியாய் நோய்சகிக்க மாட்டாமல் வருந்துவதை நவாபுகண்டு காவலிலிருந்த சுவாமிகளைக்கொண்டு வரும்படி ஏவலாளிகளுக் குத்தரவுசெய்தான் அவர்கள் சுவாமிகளைத் தேடிக்காணமல் நவாபுக்குத் தெரிவித்தனர். சுவாமிகளுருக் கொண்டுவந்த முருகக்கடவுள் அவவாறே ஆர்க்காட்டு நவாபு மனைவி சொற்பனத்திற் றோன்றி யவள்வயற்றிலும் வேலாற்குத்தி மறைந்தனர். பின்பு ஆர்க்காட்டு நவாபு என்னென்ன வயித்தியம் செய்வித்தும் அவள்வயிற்றுவலி நீங்காமையால் அவள் இப்பதியிலுள்ள காவித்தம்பிரான்க ளெல்லோரையும்கொண்டுவந்தால் குத்தினவனைக் காட்டுவேனென்னக் காவலாளிகள் அவவாறே சிவசங்கர சுவாமிகளுடன் அவ்விடத்திருந்த எல்லோரையும் கொண்டுவந்து ஒவ்வொருவராய்காட்ட அவள் சிவசங்கர சுவாமிகளைக் கண்டவுடன் இவரே யென்னைக்குத்தினவர் என்றனள். இதைக் கேளவியுற்ற நவாபு இப்பரதேசி யிப்பெருங்காவலில் வந்து குத்தினரென்பது நம்பத்தக்கதல்ல ஆதலால் இவர்மேற் பிழைசுமத்தப் படாதென மதித்து அன்புடன் சுவாமிகளைநோக்கி யிதற்குக் காரணமென்னென் றுவினவ அவர் அதுவரையில் நடந்தசங்கதியாவும் வெளியிட்டனர்.

நவாப்பு இந்நோய் தீர்ந்தால் உமக்கு வேண்டுவன யாவும் தருவோமென்னச் சுவாமிகள் ஆறுமுகம் துணையென்று திருநீறு கொடுக்க வுடனே நோய் நீங்கிற்று. சுவாமிகள் விடைகொண்டு போய்முன்னிருந்த விருக்ஷத்தடியில் வீற்றிருந்தனர். அன்றிரவிலும் முருகக் கடவுள் அவ்வாறே வேலாற்குத்த, மனைவிநவாபை வரவழைத்துப் பெரியவருக்குநீசொன்னபடி யின்னும் நடவாமையால்பின்னு மொருதரம் குத்தமுன்னிலும் அதிகவருத்தப் படுகின்றேனென்றனள். உடனே நவாபு அமைச்சரையனுப்பிப் பெரியவரை வரவழைத்து யாது வேண்டுமென்னச் சுவாமிகள் திருப்போரூர் ஆண்டவர் பூஜைப்படித்தர வுற்சவாதிகள் எப்போதுங் குறைவின்றிநிறைவேறக் கிராம சுரோத்திரியங்கள் வேண்டுமென்ன, நவாபு உடனே தண்டலம் திருப்போரூர் இரண்டுகிராமங்களையும் சுரோத்திரியமாகச் செப்பேட்டில் தானபத்திர மெழுதிக்கொடுக்கச் சுவாமிகள் ஆறுமுகம் துணைசெய்யுமென்று திருநீறளித்து நோயையகற்றி யானைசேனை பரிவாரங்களுடன் திருப்போரூர் வந்து ஆண்டவரைத் தரிசித்துப் பரிஞுமத்திற் சென்று பூஜைமுடித்து அமுதருந்தி வீற்றிருந்தனர்.

இவ்வாறு எட்டுநாள் வரையில் கோவளநவாபு மனைவிவயற்றுவலி நீங்காமையால் வருத்த முற்றிருக்கும்போது ஆர்க்காட்டு நவாபிடத்திலிருந்து வந்தகட்டளையைக் கண்டு பயந்து தன் மனைவிக்கு நேர்ந்ததும் கடவுளாக்கினை யெனத்தேர்ந்து திருப்போரூருக்கு வந்து சுவாமிகளைக் கோவளத்துக்குச் சிவிகையிலழைத்துக்கொண்டு போய் மனைவியைக் காட்டச் சுவாமிகள் ஆறுமுகந்துணை செய்யுமென்று திருநீறு கொடுத்து நோயை நீக்கி யந்நவாபுவி னுதவியால் திருப்பணி கும்பாபிஷேக முதலியவற்றை நிறைவேற்றினர். குத்தம்பாக்கம் முத்து முதலியாரைக் கொண்டு தேர்நிலை மண்டபமும், கன்னிகைப்பேறு நயனப்ப முதலியாரைக்கொண்டு வேடர்பறி மண்டபமும், பைகோ நல்லா செட்டிரைக் கொண்டு மாடவீதி தடாகம் முதலியவும், அவரவர்களைக் கொண்டு பிரமோற்சவாதிகளும் நிறைவேற்றிவந்து பின்பு ஆற்காட்டு நவாபுவின் உதவியால் பூவிருந்தவல்லிச் சீர்மையில் கந்தர் மேரைப் பிச்சையும் ஏற்பாடு செய்வித்தனர்.

பிறகு முருகக்கடவுள் சொப்பனத்தினால் காஞ்சிபுரத்திலிருந்து ஒரு வேதியச் சிறுவன் திருப்போரூருக்கு வந்து சுவாமிகளுக்குப் பணிவிடை புரிந்து கொண்டு நூற்கேள்வி முயன்று வருங்கால் தமக்குப்பரிபூரண தசையணுகினது தேர்ந்து அப்பிள்ளைக்கு வீராகம விதிப்படி சிவலிங்கதாரணஞ் செய்து ஞானனுபூதியனுக்கிரகித்து முத்துக்குமாரத் தம்பிரானென்னும் தீக்ஷாநாமந் தந்து ஆண்டவர் கைங்கரியங்களை விருத்தியாய் நடத்திவரக் கடவையென்று கட்டளையிட்டு நிரதிசையானந்த நிஷ்டானுபூதியிலொடுங்கினின்றனர்.

---

மூன்றாவது

## முத்துக்குமாரசுவாமிகள்.

ஸ்ரீமுத்துக்குமார சுவாமிகள் சர்வவாத்தியமண்டப மூலவறை மூன்றுடன் வள்ளிநாச்சியார் சந்நிதானத்தையடுத்த மண்டபமேடைவரையில் முற்றுவித்து முன் கருங்கற்பணிவரையில் நிறுத்தியிருந்த கோபுரமேனிலைகளைக் கட்டுவித்து வடமொழி தமிழ் ஆந்திரம் இவற்றுள் சில நாடகங்களியற்றி ஆலயத்தில் நவராத்திரி யுற்சவத்தில் ஒன்பதுநாளும் நடக்கும்படி செய்வித்தனர்.

இதற்குச்சமார் ௬0-வருஷங்களுக்குமுந்தி சுவாமிகள் ஐதர் கலகத்துக்கு அஞ்சி ஆலய மூலஸ்தானத்திற்குக் கற்றிரைசாத்திச் சாமானியபூஜை நடக்கும்படிக் கட்டளையிட்டு உற்சவமூர்த்திகளை யெழுந்தருளப்பண்ணி சென்னை மல்லீஸ்வரராலயத்திலிருத்தி ஐந்துவருஷகாலம் சென்னையிலேயேயிருந்து பாதுகாத்துப் பிச்சையேற்றுக் கோயிற்காரியங்களை நடத்திவந்து கலகம் நீங்கினபிறகு உற்சவமூர்த்திகளைத் திருப்போரூருக்கெழுந்தருளப்பண்ணிக் கும்பாபிஷேக முதலியவற்றை முறையே நடத்தினர்.

அவ்வாறு கலகப்பட்டிருந்தகாலத்தில் பிரணவகிரியாலய சுரோத்திரிய கிராமங்கள் இள்ளலூர் இடையன்குப்ப மிரண

டும் இஸ்தியாக்கி தவக்கப்பட்டு இராஜாங்கத்தாரால் தமது வசப்படுத்திக்கொள்ளப்பட்டன. அச்சங்கதியைத் தையநாயகமுதலியார் சந்ததியார் கேள்வியுற்றுத் திருப்போரூருக்குவந்து சுவாமிகளிடத்தில் எண்ணூறுவராகன் கொடுத்தனர், அவ்வருப்படியைக்கொண்டு பிரணவகிரியாலய பூஜைமுதலானவை நடந்து வருகின்றன, பின்பு சிலநாள்பொறுத்து ஆலயத்தின் வடபால் சிறியதாயிருந்த விசுவநாதராலயம் அம்மன்கோயில் அர்த்த[illegible]ளம் மகாமண்டபம் பிராகாரம் பலிபீடம்முதலியவைகளைப் பெருவளூர் அய்யாமுதலியாரைக்கொண்டு முடித்தனர்.

பிறகு சுவாமிகள் பரிபூரணதசை யணுகுவது தேர்ந்து முருகக்கடவுளின் கட்டளையின்படி திருப்போரூரில் திருவண்ணாமலை மடத்திலிருந்த ஓர் சைவரது புத்திரரை வருவித்து அப்பிள்ளைக்கு வீராகமவிதிப்படி சிவலிங்கதாரணஞ்செய்து சிவசங்கரதம்பிரானென்று தீக்ஷாநாமந்தந்து தேவஸ்தானகாரியமும் திருப்பணியும் கிரமமாய் நடத்திவரக்கட்டளையிட்டு நிரதிசயானந்த நிஷ்டானுபூதியில் நீக்கமறநின்றனர்.

---

நான்காவது

## சிவசங்கர சுவாமிகள்.

சுவாமிகள் ஆசிரியர் கட்டளையின்படி சுவாமிகாரியத்தை முறையேநடத்தி உற்சவமூர்த்தி சந்நிதியில் மகாமண்டபம்கட்டுவித்துச் சர்வவாத்தியமண்டபத்திற்கு அஸ்திபாரமமைத்து முக்குதிரைக்காலிரண்டு ஒற்றைக் குதிரைக்காலிரண்டு சாதாக்கால் நான்கு நிறுத்தி மூன்றுபத்தி கருங்கற்பணிமுடித்தனர். அன்றியும் புதியரதமும் பொன் மயில்வாகனமுமியற்றுவித்துச் சான்றோரைக்கொண்டு ஆலயத்திற்கெதிரில் பதினாறுகால்மண்டபமும் வணிகரைக்கொண்டு அக்கினிமூலையில் மண்டபமுங் கட்டுவித்தனர்.

இங்ஙனம் நடந்துவருகையில் ஆர்க்காட்டு நவாபு செங்கல்பட்டுஜில்லாவைக் கும்பெனியாருக்கு ஜாகீராகக் கொடுத்துவிட்டபடியால் அவர்கள் பூவிருந்தவல்லி சேர்மையார் கொடு

த்துவந்த நெல்வரும்படியை மேல்வாரத்திற்சேர்த்துக்கொண்டு அதற்குப்பதிலாக வருஷத்தில் ரூபா ௨ரு.சுக - மேரைகொடுக்கின்றனர்.

ஒருநாளிரவில் சுப்பிரமண்யர் சிவசங்கரசுவாமிகள் சொப்பனத்தில் ஆசிரியவடிவாய்த்தோன்றித் தென்தேசத்திலிருந்து ஒரு வேதியக்குழந்தை தாயுடன் வருகின்றது, அக்குழந்தையை இத்தேவஸ்தானத்திற்குரித்தாக்கிக்கொள்ளென அவ்வாறே யக்குழந்தையை யெதிர்நோக்கிவரவழைத்துச் சிவலிங்கதாரணஞ்செய்வித்து முத்துக்குமாரத் தம்பிரானெனப் பெயரிட்டு வடமொழி தமிழ் ஆந்திரபாஷைகளைக்கற்பித்துக் காத்துவருங்கால் ஓர்நாள் சுவாமிகளுக்கு மார்புநோய்கண்டு பிள்ளையைநோக்கிச் சுவாமிகாரியத்தைப் பார்த்துக்கொள்ளென ஆக்கியாபித்துப்பரிபூரணதசையையடைந்தனர்.

---

## ஐந்தாவது
## முத்துக்குமாரசுவாமிகள்.

சுவாமிகள் சென்னை நமச்சிவாயசெட்டியாரைக்கொண்டு வாகனமண்டபமும், காமுசெட்டியாரைக்கொண்டு வேப்படி விநாயகர்கோயிலுக்கு மண்டபம் திருமதில் முதலியவுங்கட்டுவித்துத் தருமகாரியங்களைக் கிரமப்படி நடத்திவருங்கால் தேகத்தில் வைசூரிகண்டு நோயதிகரிக்க முருகக்கடவுள் அவர் கனவில் குருமூர்த்தமாய்த்தோன்றிச் செய்பாக்கத்தில் ஓர்பெரியவர்கூன் முதுகினர் வீரசைவமரபினர் உப்பிலாப் புசிப்பினராயிருக்கின்றனர் அவரை யாதீனத்திற் குரியவராக்கிக்கொள்ளென சுவாமிகள் கோயிற்றுரையாரையனுப்பி யவரையழைக்க அவர்மறுத்தனர். பின்பு சுவாமிகள் பரிபூரணதசையையடைந்தனர்.

அன்றிரவில் முருகக்கடவுள் அம்முதியோர் கனவிற்றோன்றி முதுகிலமைறந்து சன்னிதிகயிங்கரியங்களை நடத்த உன்னையாட்கொண்டோமெனச் சொல்லிமறைந்தனர். அன்றிரவிலேயே முதியோருக்குக் கூன்நிமிர்ந்து அச்சமுற்று சிலதிரவியங்களுடன் திருப்போரூர்வந்தனர். தலத்தினர் அவருக்கு ஆசாரியா

பிஷேகஞ்செய்வித்துச் சிதம்பரதம்பிரானென்று பெயர்புனைந்து பரிணமத்தில் வீற்றிருத்தினர்.

---

ஆறாவது
## சிதம்பரசுவாமிகள்.

சுவாமிகள் தேவார்ச்சனைப் பிரவர்த்தரராய்த் திருப்பணிகளை முறைப்படியே நிறைவேற்றிவந்து சுமார் ௭௦ - வருஷத்திற்குமுந்தி சித்திரபானுவருஷத்தில் மூன்றுவருஷம்வரையில் சம்பவித்த பஞ்சத்திலும் சுவாமிகயிங்கரியங்களுக்குத் தவறுவரா.மல் நடத்திவந்து சுப்பிரமண்யராக்கினையின்படி பித்தலேடு கிராமத்திலிருந்து வந்திருந்த பரதேசியாருக்கு லிங்கதாரண முதலிய தீக்ஷையும் ஆசாரியாபிஷேகமுஞ்செய்வித்துச் சிவசங்கரதம்பிரானென்று பெயர்புனைந்து ஆதீனத்திற் குரியவராக்கிச் சின்னாளில் பரிபூரண தசையையடைந்தனர்.

---

ஏழாவது
## சிவசங்கர சுவாமிகள்.

சுவாமிகள் வழக்கம்போல் ஆலயத்தில் நித்திய நைமித்தியங்களை நடத்திவந்து சர்வவாத்தியமண்டபத்தைப்பூர்த்திசெய்யமுயன்று அதற்கு மகாபலிபுரத்திலிருந்து முக்குதிரைககால் ஒன்றும் சாதாக்கால் ஒன்றுங்கருவித்துத் திருப்பணிக்கு யததனித்தகாலத்தில் பரிபூரண தசையையடைந்தனர்.

---

எட்டாவது
## முருகேசசுவாமிகள்.

வல்லக்கோட்டையில் சிறுவயதுதொடங்கிப் பாலும்பழமே புசித்துக்கொண்டு சுப்பிரமண்யராலயப் பணிவிடைசெய்துகொண்டிருந்த ஒருவிரதியர் கனவில் முருகக்கடவுளெழுந்தருளித் திருப்போரூர்ச் சந்நிதிக்குவரும்படிக் கட்டளையிட

அவவீரதியர் அவ்வாறே திருப்போரூருக்கு வரக்கண்டு கோயில் அதிகாரிகள் அவரை யெதிர்கொண்டழைத்துவந்து ஆராத்திய வேதியரால் சிவலிங்கதாரணஞ்செய்வித்து முருகேசசுவாமிக ளெனத் தீக்ஷாநாமஞ்சூட்டிப் பரிஞூமத்திலிருக்கச்செய்தார்கள்.

சுவாமிகள் ஆலயப்புறத் திருமதில் மதிறகுட்பிராகாரம் தளவரிசை உக்கிராணம் முதலியன செய்வித்துத் திருமயிலை வீரபத்திரையர் யாசகப்பிரயோசனத்தினால் சரவணப்பொய் கையில் செய்துவந்த நீராழிமண்டபத்திருப்பணியை யொரு வாறு சீக்கிரத்தில் முடிப்பித்து அதில் தெப்பவுற்சவமுஞ் செய் வித்தனர்.

பின்பு தம்பிரானவர்கள் தமக்குத் தேகமெலிவுற்றதுநோக்கி மேற்குறித்த வீரபத்திரையரை வருவித்து அவருக்கு ஆசாரி யாபிஷேகஞ்செய்வித்து முத்துக்குமாரத்தம்பிரானென்று பெய ரிட்டுக் கோயிற்காரியங்களைக் கிரமமாய் நடத்திவரக் கட்டளை யிட்டுப் பரிபூரணதசையையடைந்தனர்.

---

ஒன்பதாவது

## முத்துக்குமாரசுவாமிகள்.

ஸ்ரீமுத்துக்குமாரசுவாமிகள் கோயிற்காரியங்களைக் குறை வின்றி நடத்திவருங்கால் நிதம் பத்துரூபா கிடைத்தாற் புசிப் பதென்னு நியமங்கொண்டு அவ்வருபபடியினால் ஆலயத்தில் நாயகர்சந்நிதி நாச்சியார்சந்நிதி ஸ்தூபிமுதலியவைகளைப் புதுக் கிச் சர்வவாத்தியமண்டபமேடையில் அஸ்வஸ்தம்பப்பணியும் கருங்கற்பணியுமுடித்துத் திருமயிலை மன்னன் சபாபதிமுதலி யாரைக்கொண்டு நீராழிமண்டபப்பணியைப் பூர்த்திசெய்தனர். பிரணவசைலாலய கர்ப்பக்கிரகம் ஸ்தூபி முதலியவைகளைப்புது க்கி வெளிப்பிரகாரத்தை விசாலப்படுத்தினர். மடாலயத்தருகில் சுந்தரவிநாயகராலயத்தை விர்த்திசெய்தனர்.

தினம் பத்துவராகன் கிடைத்தாற் புசிப்பதென நியமங் கொண்டு அவ்வரும்படியினாலும் அந்நியமங்கெடாமல் பட்டினி நேருந்தோறும் கட்டணமனுப்பிவந்த இராயப்பேட்டை தெய்

வசிகாமணிமுதலியாருடைய பொருட்சகாயத்தினாலும், இன்னும பலருதவியினாலும் சந்நிதானத்தின் அத்தாளம் மகாமண்டபம் திரணைமாளிகைமண்டபம் முதலியவைகளுக்குத் தளவரிசை ஸ்நாபிமுதலிய திருப்பணிகளும் ஆபரணாதிகளும் செயவித்து மகாகும்பாபிஷேகமுஞ் சிறப்பாகமுடித்தனர். அதிகபொருள்விரயஞ்செய்து வடமொழியிலிருந்த யுத்தபுரிமான்மியத்தைப் பண்டிதாளைக்கொண்டு தமிழில் மொழிபெயர்ப்பித்து ஸ்ரீ சுப்பிரமண்யர் உபாசகராகிய மகாவித்வான் புரசை அஷ்டாவதானம் சபாபதிமுதலியாரைக்கொண்டு * திருப்போரூர் தலபுராணம், திருப்போரூர் நான்மணிமாலை, சிலேடைவெண்பா, கலம்பகம், அலங்காரபஞ்சகம், யமகவந்தாதி, சதகம், பிரணவாசலசதகம், வண்ணங்கள், கீர்த்தனங்கள், சிதம்பரசுவாமிகள் ஆதீனபுராணம், சிதம்பரசுவாமிகள் பதிற்றுப்பத்தந்தாதி முதலிய அனேக பிரபந்தங்களை யியற்றுவித்து அவற்றிற் சிலவற்றை மக்கும்பாபிஷேக மகோற்சவத்தில் அரங்கேற்றுவித்து முதலியாரவர்களுக்கும் அதிகசன்மானஞ்செய்தனர்.

சுவாமிகள் தொட்டிக்கலை சபாபதிமுதலியாரை மகாநவமியுற்சவக்காரராக்கி யவரைக்கொண்டு அவ்வுற்சவத்திற்காகத் துவஜஸ்தம்பத்தைச்சூழ அதிவிசித்திரமான தேக்குமரச் சக்கரப்பந்தல் வெள்ளிக்குதிரைவாகனம், பிரணவகிரியில் ஸ்ரீகைலாயநாதருக்கு துவஜஸ்தம்ப முதலிய கயிங்கரியங்களை நடத்திவைத்தனர்.

ஆலயத்தின் கீழண்டை மதிலிலிருந்த ஸ்ரீசிதம்பரசுவாமிகள் சிலாரூபத்தில் கொஞ்சம் பின்னம்நேர்ந்தபடியால் தம்பிரானவர்கள் வேறொரு திருவுருவமமைத்து அம்மதிலைச்சேர்த்தொருசிறிய மண்டபங்கட்டி யதில் பிரதிஷ்டைசெய்து கும்பாபிஷேகம் நடத்திவைத்தனர்.

இத்தம்பிரானவர்கள் தேகப்பிரயாசம் நோக்காது சுவாமிகாரியமே யுயிர்த்துணையாகக்கொண்டு பொருள்சேகரித்து நடத்திவந்த திருப்பணிகள் பலவாகலான் அத்திருப்பணிகளும் அவற்

---

* திருப்போரூர் தலபுராணமுதலிய பிரபந்தங்களை யச்சிட்டு வெளியிடவேண்டி ஷை யாதீனத்தார் உத்தேசித்திருக்கின்றனர்.

ற்குதவிசெய்த புண்ணியசீலர் பேர்களும் சிதம்பரசுவாமிகள் ஆதீனபுராணத்திற்காணப்படும்.

இவ்வாறு தம்பிரானவர்கள் பலதிருப்பணிகளைநடத்திவருங் கால் தமக்குப்பரிபூரணதசையணுகுவது தேர்ந்து தமயிடத்தபக்தியோடு விசுவாசமாயிருந்த கந்தசுவாமிதம்பிரானுக்குச் சிவசங்கரதம்பிரானென்னும் தீக்ஷாநாமந்தந்து தாமிருந்த விடத்திலவரையிருத்தி ஸ்ரீஷண்முகமூர்த்தியின் திருவடிநீழலமர்ந்தனர்.

---

## பத்தாவது
## சிவசங்கரசுவாமிகள்.

ஸ்ரீசிவசங்கரசுவாமிகள் பட்டமானகாலத்து அதிபாலியரா யிருந்தும் உடனே சேர்ந்த சாதுவருஷ க்ஷாமத்தில் தேவஸ்தான வரும்படி குறைந்தபடியால் சென்னை முதலிய இடங்களிற் பிரவேசித்துப் பலருடைய வுதவியைக்கொண்டு கோயிற் காரியங்களை முறையே நடத்திவந்தனர்.

பிறகு சிலநாள்கழித்துச் சர்வவாத்திய மண்டபத்திருப்பணியைத்துவக்கித் தமதாசிரியரைப்போல் நிதம் ௨ரு-ரூபா கிடைத்தாற் புசிப்பதென்று நியமம்பூண்டு அவ்வாறு கிடைத்தபொருளால் அதிகப்பிரயாசையுடன் மகாமண்டபத்தில் க௨-அடியுயரமுள்ளகுதிரைத்தம்பங்கள் - ௨, அணிவட்டத்தம்பங்கள் - ௨, ௨க-அடி சிம்மவுத்திரங்கள் - ௫, யாளியுத்திரம் - க, கொடியுத்தரம்-௨, முத்தலைப்போதிகள்'' நாற்றலைப்போதிகள் ஆதாரச்சிலைகள்முதலிய கருங்கற்சாமான்களைச் செய்வித்து அவற்றிற்சிலவற்றைத் திருப்போரூருக்குத் தருவித்து வேலைதீர்த்துத் தமதாசிரியர் குறையாய் விடுத்துப்போன முக்குதிரைத்தம்பங்களையும் வேலைதீர்த்து ஆதாரச்சிலையில்நாட்டினர்.

அவ்வாறு தம்பிரானவர்கள் திருப்பணியில்முயன்று வருங்கால் பக்தபராதீனரிற்சிலர் ஆலயத்தின் கீழண்டைமதிலிலெழுந்தருளியிருந்த ஸ்ரீசிதம்பரசுவாமிகளுக்கு மழையும் வெய்யலும் படாதவண்ணஞ் செய்விக்கவேண்டுமெனக் கொடுத்தபொருளுதவியைக்கொண்டு அவ்வாறுசெய்ய மதிலோரத்திலிடமின்மை

யால வடவண்டை மதிலோரத்திலோர் சிற்றாலயங்கட்டிக் கும்பாபிஷேகமு நடத்தினர்.

தம்பிரானவர்கள் கோயிற்காரியங்களை யுள்நுழைந்து பார்க்கத்தலைப்பட்டதால் அதைச்சேர்ந்த சிலருக்கு மனவருத்தமுண்டாய் மேற்குறித்த சிதம்பரசுவாமியாலயம் முன்னிலைச்சூட்டாக நேர்ந்த கலகவிருத்தியினால் முயற்சியாய் நடந்துவந்த சர்வவாத்தியத்திருப்பணி தடைப்பட்டது. அச்சமையத்திற்கோயிற்சொத்துக்கள் களவுபோனதோடு, மூலஸ்தானத்தில் அபிஷேகமூர்த்தத்துக்கு * பின்னம்நேர்ந்தது. அச்சங்கதியையப்போது மயிலையிலிருந்த தம்பிரானவர்கள் கேள்வியுற்று அதிக ஆராமையுடன் உடனே வள்ளிதெய்வயானை சமேத சுப்பிரமண்யமூர்த்தம் பிரதிஷ்டைசெய்வித்துக் கும்பாபிஷேகம் நடத்தினர். கோயிற்காரியாதிகள் பழயபடியே கிரமமாய் நடந்தேறிவருகின்றன.

---

* பிரளயஜித்தென்று சொல்லப்பட்ட காஞ்சிக்ஷேத்திரத்தில ஸ்ரீகாமாட்சிதேவியார் பூஜித்த மணலுருவாகிய சிவலிங்கமூர்த்தம், அம்மையார்வளைத்தழும்பு முலைத்தழும்புகளுடன் இன்றும் அங்கு மூலஸ்தானத்தில் வீற்றிருப்பதாகப் பிரமாணமிருப்பதால், திருப்போரூர் தலமான்மியத்திற் சொல்லியபடி கற்பங்கள்தோறும் ஆன்மாக்கள் பரிபாகத்துக்குத்தக்கபடி தோன்றுவதும் மறைவதுமாக வீற்றிருப்பவரும், ஸ்ரீ சிதம்பரசுவாமிகளுக்கு ஸ்ரீ அங்கயற்கண்ணம்மை திருவாய்மலர்ந்தருளியபடி ஏழுமுறை ஜீர்ணோத்தாரணஞ் செய்யப்பட்ட ஆலய மூலஸ்தானத்தில் வீற்றிருப்பவருமாகிய சுயம்புமூர்த்தத்துக்கு பின்னம் நினைக்கக் கூடுமோ? ஸ்ரீ சிதம்பரசுவாமிகள் ஆதியில் தரிசித்தபோது சுயம்புமூர்த்தம் வீற்றிருந்த பனமரத்தடியின் ஆழத்தையும், பின்னப்பட்ட அபிஷேகமூர்த்தம் எழுந்தருளியிருந்த மூலஸ்தான மேடையின் உயரத்தையும், ஸ்ரீசிதம்பரச்சக்கரத்தின் கருத்தையும், யோசிக்காமல் திருப்போரூருக்குவருபவர் தோன்றியவாறு பேசுவது புண்ணியக்ஷேத்திரத்துக்குப்போய் பாவங்கொள்வதாகும். திருப்போரூரில் வேம்படிவிநாயகராலயம், பிரணவசைலபிலத்துவாரம், சுப்பிரமண்யர் மூலஸ்தானம், சிதம்பரசுவாமிகள் ஒடுக்கவறையுள், ஆகிய விந்நான்கு ஸ்தானங்களின் இரகசியங்களை விசாரித்தறிவாராக.

உ

ஸ்ரீசிதம்பரசுவாமிகள் ஆதீனத்தார்

திருநக்ஷத்திரம்.

---

க. ஸ்ரீசிதம்பரசுவாமிகள் வைகாசியீ விசாகம்.
உ. சிவசங்கரசுவாமிகள் மார்கழியீ பூராடம்.
ங. முத்துக்குமாரசுவாமிகள் ஆனியீ பூராடம்.
ச. சிவசங்கரசுவாமிகள் கார்த்திகையீ திருவோணம்.
ரு. முத்துக்குமாரசுவாமிகள் ஆடியீ விசாகம்.
சா. சிதம்பரசுவாமிகள் ஆடியீ திருவோணம்.
எ. சிவசங்கரசுவாமிகள் ஐப்பசியீ சதயம்.
அ. முருகேசசுவாமிகள் வைகாசியீ மிருகசீரிஷம்.
கூ. முத்துக்குமாரசுவாமிகள் மாசியீ ரேவதி.

---

ஸ்ரீ அங்கயற்கண்ணம்மை திருவாய்மலர்ந்தருளியபடி ஆதியில் ஸ்ரீசிதம்பரசுவாமிகளுக்குத் திருப்போரூரில் ஸ்ரீசுப்பிரமணிய குருமூர்த்தமாயெழுந்தருளியனுக்கிரகித்தது முதல் மேற்படியாதீனத்தார் பட்டத்துக்குவரும்போது, சந்நிதியில் ஆறுகட்டுக்காரமேடைமுதலிய மரியாதைகளைப்பெற்றுவருகின்றனர்.

சிவசண்முகன் துணை.

---

உ

முருகன் துணை.

திருப்போரூர்

# ஸ்ரீசிதம்பரசுவாமிகள்

அருளிச்செய்த சந்நிதிமுறையில்

# கலிவிருத்தம்.

அருளைங்கரனிளையோய்திகழாறுனனநாதா
விருளின்றியிருந்துன்பதமென்றெய்துவலடியேன்
மருவொன்றியசீபத்தொடைமார்பாவடிவேலா
இருவொன்றியபோரூருறைதேவாகுகனே. (க).

ஈசன்றருகுமாரவிமலேரியானமகள்புதல்வா
நேசந்திகழ்திருப்பாவையர்நினைவொன்றியவடிவ
மாசின்றுணர்தருணின்றிவழிதந்தெனையாளாய்
தேசொன்றியபோரூருறைதேவாகுகவேளே. (உ)

புவனங்கவசமுஞ்செறிபுறனுள்ளொடுநிற்பே
னவமொன்றியசுகபூரணமாகாயமேபோத
நவமும்பதியறிவுங்கனிதந்தென்றெனையாளாய்
புவனின்சுதபோரூருறைதேவாகுகவேளே. (௩)

குரோசனையையறிவீரகவொடுமுறுபகயயூத
மோகமுறவெந்தாயுமெனனுனானனுந்தினையாய்
தாமரைபககூரவலவுதடமாமயிலவிரா
சிமேவியபோரூருறைதேவாகுகவேளே. (௪)

தீகாப்பரியிசையோபதாளானணிதோளா
சுகநற்கதிபெறவெந்தாதுகள் டநினையா
நிகழ்குக்கிடவி காரநிருப ருகா
திகழ்வுற்றிடுபோரூருறைதேவாகுகவேளே. (ரு)

நல்வந்தனையடியாருளநாடும்படிதருவோ
யல்வஞ்சனையற ன்னுளமருள்செய்ததின் 
யெல்வந்துறு மயிலேறுந்தெய்வராயா
செல்வந்திகழ் ரூருறைதேவாகுகவேளே.

கனகும்பன வி விழிகாணுந்திருவடியாய்
நினைவும்மலவிருள் மறுநிலைதந்தெனையாளாய்
வனசந்திகழ்திரு தருள்வளருஞ்சனர்குழுமித்
தினமும்புகழ்போரூருறைதேவாகுகவேளே. (எ)

அயனாரறிவருமோர்மொழியரனார்க்கருளியவா
மயறிர்ப்பரிபுரணத்திடைவைத்தின்றெனையாளா
யுயர்மாமறைமுடிமீதினிலுறுகாரணசுகமே
செயவேலவ றதேவாகுகவேளே. (அ)

வானோர்தெ டைமன்னன்றருமதியே
ஞானேதயமகலாதெ ன்னும்படியருளாய்

கோனேயருளோனேகுணவானேமயிலேவானே
தேனுறமொழிறமபோருறைதேவாகுகவேலே.

இசைமொழி [illegible]
வசைவினை [illegible]
விசைசெனி [illegible]
திசைமொ [illegible] குகவேலே.

---

# விருத்தக்கலித்துறை.

[illegible]

[illegible]

[illegible]

அறிவொளி [illegible]
பிறிவரு [illegible]
பொறிவழி [illegible]
துறையுயிர் [illegible] யானே.

[illegible]

உ

விஸ்வப்ரம்ஹமூர்த்தி

# விஸ்வப்ரம்ஹசந்தியாவந்தன மூலம்.

திருநெல்வேலி

சொ. சுப்பிரமணிய ஆசாரியார்

வேணுகோபாலின்படி

ஸ்நானம் விபூதிதாரணம்-திரிகாலசந்தியாவந்தனம்

பஞ்சோபவீததாரணம்-அமாவாசைதர்ப்பணம்

இவைகளை

திருநெல்வேலி

ம-ள-ள-ஸ்ரீ நெல்லையப்ப உபாத்தியாயரவர்களால்

பரிசோதிக்கப்பட்டு

ஆதனூர்க்குடியிலிருக்கும் ஸ்ரீமானுண்டம்

ம-ள-ள-ஸ்ரீ சண்முகசுந்தராசாரியார்

அவர்களால்

சென்னை

ஆதிகலாநிதி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

Registered Copy-right.
1887.

# முகவுரை.

ஸ்ரீமத்பராத்பரவிராட் விஸ்வகர்மபஞ்சானனோற்பவமனுமய - துவஷ்ட - சிற்பி - விஸ்வக்ஞர்களென்னும் பஞ்சப்ரம்மஜாதிகள் - அசேஷத்திற்கும்,

## விஞ்ஞாபனம்.

பிரமதேஜசு-அழகு-உயர்வு-சுத்தம்-நல்லறிவு-செல்வம் இவைகளை இயல்பாகவே தருவதாகிய நித்தியநைமித்திக கருமங்களைத் தவறாமல் அனுஷ்டித்துவருவதால், பாவக்ஷயமும் புண்ணியவிருத்தியும், சித்தசுத்தியும், சதுர்விதபுருஷார்த்தசித்தியும் உண்டாகுமென்றும்,

அநனுஷ்டியாவிடின் பிரமதேஜசு-அழகு - உயர்வு-சுத்தம்-நல்லறிவு-செல்வம் இவைகள் இயல்பாகவே குறைந்து, புத்திமலினத்தன்மையும், பழிபாவவிருத்தியும், புண்ணியக்ஷீணமும், சித்தசுத்தியின்மையும், நரகப்பிராப்தியும் உண்டாகுமென்றும், சுருதி ஸ்மிருதி இதிகாசபுராணங்கள் முறையிடுவதால அவசியம் அனுஷ்டித்துவரவேண்டும்.

## அட்டவணை.


| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| ஸ்நானம் | ௧ |
| விபூதிதாரணம் | ௩ |
| பிராதக்காலசந்தியாவந்தனம் | ௫ |
| மாத்தியான்னிகசந்தியாவந்தனம் | ௧௫ |
| சாயங்காலசந்தியாவந்தனம் | ௨௭ |
| யக்ஞோபவீததாரணம் | ௨௫ |
| ஆமவாஸ்யைதர்ப்பணம் | ௨௯ |
| போஜனம் | [illegible] |

### யக்ஞோபவீததாரணம்.

### ஆசமனம் [illegible]

கேசவாயஸ்வாஹா * ஸ்ரீ[illegible]நாயக:.
வேறு - அச்சுதாயநம: * தாமோதராயநம:.

### ப்ராணாயாமமந்திரம்.

ஓம்ப்ரணவஸ்ய * பூர்புவஸ்ஸுவரோம

### சங்கற்பம்.

மமோபாத்ததுரிதக்ஷய-த்வாரா ஸ்ரீபரமேஸ்வரப்ரீத்யர்த்தம் - ஸ்ரௌதஸ்மார்த்த-நித்யகர்மாநுஷ்டான யோக்யதா ஸித்யர்த்தம்-நூதனயக்ஞோபவீததாரணங்கரிஷ்யே.

### யக்ஞோபவீதமந்திரம்.

யக்ஞோபவீதம் பரமம்பவித்ரம் ப்ரஜாபதேர்யத் ஸஹஜம்புரஸ்தா தாயுஷ்ய மக்ரியம்ப்ரதிமுஞ்ச சுப்ரம் யக்ஞோபவீதம் பலமஸ்துதேஜ:

### காயத்ரிஜபமந்திரம்.

ஓம்தத்ஸவிதுர் * ப்ரசோதயாத்
ஓம்தத்ஸத்ப்ரம்ஹார்பணமஸ்து.

விஸ்வப்ரம்ஹணேநம:.

## அமாவாஸ்யை தர்ப்பணம்.

ப்ரசனோவினியோக:.

### ஆசமனமந்திரம்.

கேசவாயஸ்வாஹா * ஸ்ரீகிருஷ்ணாயநம:

வேறு. அச்யுதாயநம: * தாமோதராயநம:.

### பவித்ரதாரண மந்திரம்.

பவித்ரவந்த: பரிவாஜமாஸதே - பிதேஷாம்பிரத்நோ அபிரக்ஷதே விருதம் - மஹஸ்ஸமுத்ரம் வருண ஸ்திரோததே - தீராஸோதிர்தரணே ஷ்வாரபம்.

### ப்ராணாயாமமந்திரம்.

சமஸ்தசம்பத்ஸமவாப்தி ஹேதவ: சமுத்திதாபத் குலதூமகேதவ:- அபாரசம்சார சமுத்ரஸேதவ:- புனந்துமாம் ப்ராம்ஹணபாதபாம்சவ:, நமோப்ரம ஹண்யதேவாய கோப்ராம்ஹணஹிதாயச- ஜகத்ஹி தாய கிருஷ்ணாய கோவிந்தாய நமோநம:.

### அனுக்ஞைமந்திரம்.

அசேஷேஹபரிஷத் பவத்பாதமூலே-மயாசமர்ப் பிதாம்-இமாம்சௌவர்ணிம் தக்ஷிணாம்-யத்கிஞ்சித்தக் ஷிணாம்-யதோக்த தக்ஷிணாம் இவஸ்வீகிருத்ய.

கோத்ராணாம் வசுருத்ராதித்ய ஸ்வரூபாணாம்- அஸ்மத்பிதுர்பிதாமஹப்ரபிதாமஹானாம்-மாதுல கோத்ராணாம்-மாதாமஹமாதுப்பிதாமஹ- மாதுப்ர பிதாமஹானாம்- உபயவம்சபிதுர்ணாமக்ஷய புண்ய லோகாவாப்த்யர்த்தம்- அமாவாஸ்யா: புண்யகாலே- தர்சசிராத்தம் சதபஸ்திலதர்ப்பணேந-கர்மகர்த்துப் யோக்யதாசித்தி மனுக்கிரஹாண.

ப்ரதிவசனம்-ததாஸ்து-யோக்யதாசித்திரஸ்து.

சங்கல்ப.

மமோபாத்த துரிதக்ஷயத்வாரா- ஸ்ரீபரமேஸ்வர ப்ரீத்யர்த்தம்சுபேசோபனேமுகூர்த்தே- சிவசப் பேர ராக்ஞயா-ப்ரவர்த்தமானஸ்ய- ஆத்யப்ரம்ஹணஃத் விதியபரார்த்தே- ஸ்வேதவராஹகல்பே-வைவஸ்வ தமன்வந்தரே-கலியுகே-ப்ரதமபாதே- ஜம்பூத்வீபே பாரதவருஷே- பரதகண்டே-சகாப்தே- மேரோஃ- தட்ஷிணதிக்பாகே- ஸ்ரீசைலஸ்ய ஆக்னேயப்ரதேசே கிருஷ்ணாகாவேர்யோர்மத்யதேசே- சமஸ்ததேவ ப்ராம்ஹணசந்நிதௌ-அஸ்மின்வர்த்தமான-வ்யவஹாரி க- சாந்த்ர சௌரமானேன-பிரபாவதிஷஷ்டி சம் வத்ஸராணாம் மத்யே-சம்வத்சரே-அயனே-ருதௌ மாசே-பக்ஷே திதௌ-வாசரே-சுபநக்ஷத்திரே- சுப யோகே- சுபகரணே-ஏவங்குண விசேஷண விசிஷ் டாயாம்-புண்யதிதௌ(பிராசீனவீதி) உபவீததாரை டப்புறந் தரித்துக்கொண்டு நோநராணாம்- வசு ருத்ராதித்யஸ்வரூபாணாம்- அஸ்மத்பிதுர்பிதாமஹப்ர பிதாமஹானாம்-மாதுலகோத்ராணாம்-மாதாமஹ மா து:- பிதாமஹ-மாதுஃ- ப்ரபிதாமஹானாம்-உபயவம் சபித்ருணாம் அக்ஷயத்ருப்ததியர்த்தம் அமாவாஸ்ய புண்யகாலே சத்தியஸ் - திலதர்ப்பண ரூபேணகரி ஷ்யே.

மந்திரம்.

ஆயாதபிதாஸ்ஸோம்யா கம்பீரை:-பதிபி:பூர்வைஃ ப்ரஜாமஸ்மப்யம- ததேதோரயிஞ்ச தீர்க்காயுத்வஞ்ச சதசாரதஞ்ச.

கோத்ரான்-சர்மமணஃ-வஸுருத்ராதித்யஸ்வரூபா ன் - அஸ்மத்பித்ரு பிதாமஹப்ர பிதாமஹான்-மா,

# விஸ்வப்ராம்ஹசந்தியாவந்தனம்.

ஸகோத்ரான்- சர்ம்மணஃ- வஸுருத்ராதித்ய ஸ்வரூபான்- அஸ்மத்பிதாமஹ- மாதுஃபிதாமஹ மாதுஃப்ரபிதாமஹாநுவாஹயாமி.

மந்திரம்.

ஸக்ருதாச்சின்னம் பர்ஹிரூர்ணா ம்ருதுஸ்யோநம்-பித்ருப்யஸ்த்வா பராம்யஹம்- அஸ்மின்ஸீதந்து மேபித்ரஸ்ஸோம்யாஃ பிதாமஹாஃப்ரபிதாமஹாச்சாநுகைஸ்ஸஹ.

கோத்திராணாம்- சர்மணாம்- வஸுருத்ராதித்யஸ்வரூபாணாம்- பித்ருபிதாமஹப்ர பிதாமஹாணாம்-மாதாமஹ மாதுஃ பிதாமஹ- மாதுஃ ப்ரபிதாமஹாநாமிதமாசனம்.

மந்திரம்.

ஊர்ஜம்வஹந்தீரம்ருதம் க்ருதம்பயஃ கீலாலம்பரிஸ்ருதம் ஸ்வதாஸ்த தர்ப்பயதமேபித்ருன்.

தர்ப்பணம்.

கோத்ரான்- சர்ம்மணஃ-வஸுரூபான்-பித்ருன்-ஸ்வதாநமஸ்தர்ப்பயாமி.

கோத்ரான்-சர்ம்மணஃ- ருத்ரரூபான்- பிதாமஹான்- ஸ்வதாநமஸ்தர்ப்பயாமி.

கோத்ரான்- சர்ம்மணஃ-ஆதித்யரூபான்- ப்ரபிதாமஹான் ஸ்வதாநமஸ் தர்ப்பயாமி.

கோத்ராஃ-நாம்னீஃ-மாத்ருஃஸ்வதாநம ஸ்தர்ப்பயாமி.

கோத்ராஃ- நாம்னீஃ- பிதாமஹீஃ-ஸ்வதா நமஸ்தர்ப்பயாமி.

கோத்ராஃ- நாம்னீஃ- ப்ரபிதாமஹீஃ- ஸ்வதாநமஸ் தர்ப்பயாமி.

க்ஞாதாக்ஞாத பித்ருன்ஸ்வதா நமஸ்தர்ப்பயாமி- ஸ்வாமிநஸ்தர்ப்பயாமி- சகீன்தர்ப்பயாமி- குரூன்ஸ்

தர்ப்பயாமி- ஆசார்யான்ஸ்தர்ப்பயாமி- சர்வான்-கா ருண்ய பித்ருன்- ஸ்வதாநமஸ தர்ப்பயாமி.

...ர்க்ருாத பித்ருன்ஸ்வதாநமஸ்தர்ப்பயாமி- ...யிநஸ்தர்ப்பயாமி- சகின் தர்ப்பயாமி- குருன்ஸ ...ப்பயாமி- ஆசாரியான்ஸ் தர்ப்பயாமி-சர்வான்கா ருண்யபித்ருன்- ஸ்வதாநமஸ்தர்ப்பயாமி,

மந்திரம்.

ஊர்ஜம்வஹந்திரமிருதம் கிருதம்பய: கிலாலம் ப ரிஸ்ருதம- ஸ்வதாஸ்த-தர்பயத-மேபித்ருன்-திருப் யத-திருபயத-திருப்யத.

மந்திரம்.

யாதிகாநிசபாபாநி ஜென்மாந்தரக்ருதாநிச-தா நிதாநிவிநசயந்தி ப்ரதட்சிணபதேபதே.

நமோப்ரம்ஹண்ய தேவாயதேவாப்ராம்ஹணா ஹி தாயச-ஜகத்திதாயகிருஷ்ணாயகோவிந்தாயநமோநம:

ஆயாதபிதரஸ்ஸோம்யகம்பிரா:-பதிபிகாபூர்வை பாஜாமஸ்மபயம - ததோராயிஞ்ச திர்க்காயுத்வஞ் சதசாரதஞ்ச.

வர்க்கத்துவயபித்ருன்- கூர்ச்சஸ்தப்பாத்யாஸ ஸ்தானம் பாதிஷ்டாபயாமி.

ஏஷான்னமாதாநபிதா - நபந்துர்நான்ய கோத் ரை:- தேசர்வேத்ருப்திமாயாந்துமயோத்ஸ்ருஷ்டை குசோதகை:-

சமாதிக்ரியை செய்பவர்களுக்கு.

ஈஸ்வரஸ்வரூபம் - பிதரம்ஸ்வதாநமஸ் த மி, சதாசிவஸ்வரூபம் - பிதாமகம்ஸ்வதா நமஸ்த ப்பயாமி. மகேஸ்வரஸ்வரூபம் ப்ரபிதா மஹம்ஸ்வ தா நமஸ் தர்ப்பயாமி.

## போசனம்.

### புரோக்ஷணமந்திரம்.

ஓம்பூர்புவஸ்ஸுவ:ஓம்தத்ஸவிதுர்வரேண்ய- பர்கோதேவஸ்யதீமஹி-தியோயோந:-ப்ரசோதயாத்

# விஸ்வப்ரம்ஹசந்தியாவந்தனம்.

பரிஷேசனமந்திரம்.

தேவஸவிதப்ரஸுவ - சத்யந்த்வர்தேன பரிஷிஞ்சாமி.

சித்ரான்னமந்திரம்.

சித்ராயநம: - சித்ரகுப்தாயநம: - யமதர்மாயநம: - வஸ்தேவ்யாயநம: - ப்ரம்ஹணேநம:.

ஆபோஜனமந்திரம்.

அம்ருதமஸ்து - அம்ருதோபஸ்தரணமஸி.

பிராணாகுதிமந்திரம்.

பிராணாயஸ்வாஹா - அபானாயஸ்வாஹா - வ்யானாயஸ்வாஹா - உதானாயஸ்வாஹா - சமானாயஸ்வாஹா - ப்ரம்ஹணேஸ்வாஹா.

ஆத்மமந்திரம்.

ப்ரம்மணிம - ஆத்மாம்ருதத்வாய.

உத்தராபோசனமந்திரம்.

அம்ருதாபிதானமஸி.

இராத்திரி பரிஷேசனமந்திரம்.

ருதந்த்வா - சத்யேனபரிஷிஞ்சாமி.

விஸ்வப்ரம்ஹணேநம:

விஸ்வப்ரம்ஹசந்தியாவந்தனம்.

ஸம்பூர்ணம்.